# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු








வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 | மலர் : 01 | 11.04.2021 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 132 | பக்கங்கள் : 16




07
மணியின் கைதுக்கு சீருடையே காரணம்



09
எல்லையில் அகதிகள்; இக்கட்டில் இந்தியா



12
இளவரசர் எடின் பரோ கோமகன் அரச வாழ்க்கையும் சவால்களும்



14
உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு இப்ராஹிமே நிதிப்பங்களிப்பு!

### சீருடைப் பிரச்னையை அமைச்சு மட்டத்தில் தீர்த்திருக்கலாம்

# உயிர்த்த ஞாயிறு குறித்த கவனத்தை திசைதிருப்பவே யாழ். மேயர் கைது



## அச்ச நிலையை ஏற்படுத்த வேண்டாம் என்கிறார் சஜித்

கொழும்பு, ஏப்ரல் 11

“யாழ்ப்பாண மாநகர முதல்வர் கைது செய்யப்பட்டமையானது மக்களின் கவனத்தை திசைதிருப்பும் நோக்கத்துடனான ஒரு செயல்பாடு” என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ அரசாங்கத்தைக் கடுமையாகச் சாடியுள்ளார். “யாழ் மேயரை பயங்கரவாதி என முத்திரை குத்துவதன் மூலமாக உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரி குறித்த விசாரணையை அரசாங்கம் நிறுத்திவிட்டது” எனவும் அவர் குற்றஞ்சாட்டியிருக்கின்றார். 15

### பாற்பண்ணை கிராமத்தில்

## பாரதிபுரம் தவிர்ந்த ஏனைய பகுதி திங்கட்கிழமை காலை விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 11

திருநெல்வேலி பாற்பண்ணை கிராமத்தில் பாரதிபுரம் பகுதி தவிர்ந்த ஏனைய பகுதி கண்காணிப்பு வலயத்திலிருந்து நாளை திங்கட்கிழமை காலை 6 மணி முதல் விலக்கப்படுகிறது.

இந்த தகவலை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். 15

## மாகாண சபை தேர்தல்கள்; 19 ஆம் திகதி இறுதி முடிவு

### கட்சித் தலைவர்களைக் கூட்டுகிறார் பிரதமர்

கொழும்பு, ஏப் 11

மாகாண சபைகளுக்கான தேர்தலை எந்தத் தேர்தல் முறையில் நடத்துவது என்பது குறித்து எதிர்வரும் 19 ஆம் திகதி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறும் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும்.

அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே இத்தகவலை நேற்றுத் தெரிவித்தார். ஆளும் கூட்டணியிலுள்ள கட்சிகள் 15

### பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து

## 50 வருட சாதனையை முறியடிக்க விமானப்படை வீரர் முயற்சி

தலைமன்னார், ஏப் 11

இலங்கை விமானப் படையைச் சேர்ந்த நீச்சல் வீரர் ரோசன் அபேசுந்தர பாக்கு நீரிணையை கடப்பதற்கான பயணத்தை நேற்று சனிக்கிழமை அதிகாலை தலைமன்னாரில் இருந்து ஆரம்பித்துள்ளார்.

இலங்கையைச் சேர்ந்த நீச்சல் வீரர் ஒருவரின் 50 வருடங்கள் பழமையான கின்னஸ் சாதனையை 15

## கொரோனா மரணம் 596 ஆக அதிகரிப்பு

கொழும்பு, ஏப் 11

நாட்டில் நேற்று மேலும் ஒரு கொரோனா மரணம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், நாட்டில் கொரோனா தொற்றினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 596 ஆக உயர்வடைந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.



## உருத்திரபுரீஸ்வரர் கோயிலில் விகாரை அமைக்க முயற்சியா?


### நேற்று விசேட கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஏப். 11

கிளிநொச்சி, உருத்திரபுரத்தில் அமைந்துள்ள உருத்திரபுரீஸ்வரர் கோயிலில் பௌத்த விகாரை அமைக்க முயற்சிக்கப்படலாம் என்பது குறித்து விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற் 15

## மணிவண்ணனுக்குப் பிணை வழங்கியது அரசா? நீதிமன்றா?

### விக்னேஸ்வரன் எம்.பி. கேள்வி



யாழ்ப்பாணம், ஏப். 11

யாழ் .மாநகர சபை முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனுக்கு, கடந்த வெள்ளிக்கிழமை இரவு யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் பிணையில் விடுதலை வழங்கியது அரசாங்கமா? நீதிமன்றமா? என 15

## திரையரங்குகளை மூட உத்தரவு

யாழ்ப்பாணம், ஏப் 11

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அனைத்து திரையரங்குகளும் மறு அறிவித்தல் வரை மூடப்படுகின்றது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

“யாழ்ப்பாணம் 15

## சிறைச்சாலையில் 4 பேர் உட்பட யாழில் 17 பேருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், ஏப் 11

யாழ்ப்பாணத்தில் மேலும் 17 பேருக்கு கொரோனா தொற்றுள்ளமை நேற்று சனிக்கிழமை கண்டறியப்பட்டுள்ளது என்று வட 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர்த்த..

கொழும்பில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். இங்கு அவர் மேலும் முக்கியமாகத் தெரிவித்தவை வருமாறு:

"நாட்டு மக்களுடைய கவனத்தைத் திசைதிருப்புவதை நோக்கமாகக் கொண்டே யாழ். மேயர் கைது செய்யப்பட்டார். உயிர்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று இரண்டு வருடங்கள் நிறைவடையும் நிலையில் அதன் உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்குப் பதி லாக நாட்டு மக்களை ஏமாற்றி, அவர் களைத் திசைதிருப்பதற்காகப் போடப்பட்ட ஒரு நாடகம்தான் இந்தக் கைது.

யாழ். மேயர் அல்லது அதிகாரிகளுடன் குறிப்பிட்ட சீருடைகள் தொடர்பில் பிரச்சினை இருந்தால், அதனை அமைச்சரவை மட்டத்திலோ அல்லது நிர்வாக மட்டத்திலோ விசாரணை நடத்த வேண்டும். அது குறித்த விசாரணைகளை முன்னெடுப்பதற்கு ஒரு முறைமை உள்ளது. உள்ளூராட்சி அமைச்சு மூலமாக அல்லது அதற்கு மாற்றான அமைப்பு ஒன்றின் மூலம் இது குறித்து விசாரணையை நடத்தியிருக்க முடியும்.

அதனைவிட ஏனைய மாநகர சபை பணியாளர்களின் சீருடையகளுடன் ஒப்பிட்டு அதில் தவறுகள் உள்ளதா என்பதைக் கண்டறிய முடியும். வெறுமனே கட்டுக்கதைகளை வெளியிடுவதைத் தவித்து, நாடகங்களைத் தவிர்து, மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்துவதைத் தவிர்த்து நீதியை நிலைநாட்டுங்கள். இவ்விடயத்தில் யாழ். மேயரை ஒரு பயங்கரவாதி போல அரசாங்கம் நடத்தியுள்ளது. அவ்வாறு அவர் நடத்தப்பட்டதை நான் முற்றாக நிராகரிக்கின்றேன்.

மிகவும் முக்கியமான இந்தத் தருணத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி இன்று வரையில் வெளிப்படுத்தப்படாமல் இருப்பது எமக்கு அதிருப்தியையும் ஆச்சரியத்தையும் தருகின்றது. இரண்டு வருடங்கள் கடந்த பின்னர் ஏற்கனவே கைதாகியுள்ளவர்களை குற்றவாளிகளாகக் காட்டுவதற்கு அரசாங்கம் முயற்சி செய்கின்றது. இது ஒரு தவறான முறை. நாட்டு மக்களை ஏமாற்றும் செயல்.

யாழ். மேயரைக் கைது செய்து பயங்கரவாதி என முத்திரை குத்துவதன் மூலம் உயிர்த்த ஞாயிறு குறித்த மக்களின் கவனத்தை திசைதிருப்ப அரசு முயல்கின்றது. இவ்வாறு மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தாமல், உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி அவர்களுக்கக் கடுமையான தண்டனையைப் பெற்றுக்கொடுப்பதைத்தான் நாம் எதிர்பார்த்திருக்கின்றோம்.

உயிர்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரி என ஒருவரின் பெயரை வெளியிட்டுவிட்டு, நாட்டு மக்கள் அனைவரையும் முட்டாள்களாக்குததைத் தவிர்த்து உண்மையான குற்றவாளிகள் நீதியின் முன்பாக நிறுத்தப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கை" எனவும் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

## சிறைச்சாலையில்...

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடம் மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வு கூடம் இரண்டிலும் 640 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்டன.

18 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் யாழ்ப்பாணத்தில் 17 பேரும் கிளிநொச்சியில் ஒருவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 5 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் நால்வர் சுய தனிமைப்படுத்தலில் உள்ளவர்கள். மற்றைய ஒருவர் யாழ்ப்பாணம் வீதி அபிவிருத்தி அதிகார சபையில் பணியாற்றுபவர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் நால்வருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை நோயாளர் விடுதியில் சிகிச்சை பெற்ற இருவருக்கு கோரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் சேர்க்கப்பட்ட நால்வருக்கு கொரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்கள் நால்வரும் சுயதனிமைப்படுத்தப்பட்டவர்கள்.

சங்கானை வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுக்கு சிகிச்சைக்குச் சென்ற இருவருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒருவருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது" என்றும் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

## பாரதிபுரம்...

"திருநெல்வேலி பாற்பண்ணை கிராமம் 14 நாள்களாக கண்காணிப்பு வலயமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அந்த கிராமத்தில் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் பாரதிபுரம் பகுதியில் 88 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

அதனால் பாரதிபுரம் தவிர்ந்த ஏனைய பகுதி நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 6 மணி தொடக்கம் கண்காணிப்பு வலயத்திலிருந்து விடுவிக்கப்படுகிறது" என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் கூறினார்.

## மணிவண்ணனுக்கு...

தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான க.வி.விக்கினேஸ்வரன் கேள்வியெழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மணிவண்ணன் நீதிமன்றத்தால் பிணையில் விடுதலை செய்யப்படுவதற்கு முன்னராகவே, மணிவண்ணன் பிணையில் விடுதலை செய்யப்படுவார் என்றும் அவர் மீது பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்படமாட்டாது என்றும் சாதாரண சட்டத்தின் கீழேயே வழக்கு தொடரப்படும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளார்.

அமைச்சரின் இந்தக் கூற்று இந்த நாட்டில் நீதிமன்றங்களும், காவல்துறையினருக்கும் பெயரளவில் மட்டுமே இருக்கின்றனவா என்ற கேள்வியையும் அரசாங்கத்தினதும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்பவே அவை செயற்படுகின்றனவா? என்ற கேள்வியையும் ஏற்படுத்தி உள்ளது.

அதேவேளை, மணிவண்ணன் அரசியல் உள்நோக்கம் கருதி வேண்டும் என்றே கைது செய்யப்பட்டிருக்கின்றார் என்ற உண்மையையும் அமைச்சரின் கூற்று வெளிப்படுத்தி நிற்கின்றது. மணிவண்ணனுக்கு ஜனாதிபதி மன்னிப்பு அளித்தது உண்மை என்றால், மணிவண்ணன் ஏதோ தவறு செய்துள்ளார் என்று அர்த்தப்படும். ஆனால், மணிவண்ணன் செய்தது தவறு என்று காவல்துறையினரால் நீதிமன்றத்தில் நிரூபிக்க முடியவில்லை. ஆகவே, ஜனாதிபதி என்ன அடிப்படையில் மணிவண்ணனுக்கு "மன்னிப்பு" வழங்கியுள்ளார்? அமைச்சர் ஏற்கனவே கூறியதுபோலவே, மணிவண்ணன் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன் அவர் மீது பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்படவில்லை.

இதுதொடர்பில், ஜனாதிபதியும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் மக்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். அதிகாரத்தில் உள்ளவர்களின் விருப்பு வெறுப்புகளுக்கேற்பவே பொது மக்கள் இம்சைப்படப் போகின்றார்கள் என்றால் நீதிமன்றங்கள் எதற்காக? காவல்துறையினர் ஜனாதிபதியின் கையாட்களா? விடை வேண்டும் என தெரிவித்துள்ளார்.

# 2 வருடமாக சிறையில் உள்ள நவ்பர் மௌலவி திடீரென முக்கிய சூத்திரதாரியானது எப்படி?

## கேள்வி எழுப்புகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஏப் 11

நவ்பர் மௌலவி என்பவரே உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் முக்கிய சூத்திரதாரி என்றால் ஏன் அவர் மூலம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த முழுமையான தகவல்களை பெற முடியவில்லை என ஜேவிபி கேள்வி எழுப்பியுள்ளது.

நவ்பர் மௌலவியே முக்கியசூத்திரதாரி என அமைச்சர் சரத்வீரசேகர தெரிவித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ள ஜேவிபியின் விஜிதஹேரத், இரண்டு வருட காலமாக தடுப்புக்காவலில் உள்ள நவ்பர் மௌலவி திடீரென முக்கிய சூத்திரதாரியாக அடையாளம் காணப்பட்டது எப்படி என கேள்வி எழுப்பியுள்ளார்.

உயிர்த்தஞாயிறு தாக்குதல்இடம்பெற்ற சிலநாட்களின் பின்னர் நவ்பர் மௌலவி கைதுசெய்யப்பட்டார். அவர் இரண்டு வருடங்களாக தடுப்புக்காவலில் உள்ளார் என தெரிவித்துள்ள விஜித ஹேரத், இரண்டு வருடம் தடுப்புக்காவலில் உள்ள நபர் மூலம் யார் சூத்திரதாரி என்பதை கண்டுபிடிக்க முடியாதா எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

தற்போது எப்படி அவர் முக்கிய சூத்திரதாரியாக அடையாளம் காணப்பட்டார் எனவும் விஜிதஹேரத் கேள்வி எழுப்பியுள்ளார். முக்கிய சூத்திரதாரி இரண்டு வருடங்களாக தடுப்புக்காவலில் உள்ளபோதிலும் அவரை ஒரு முறை கூட ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் ஆஜர்படுத்தவில்லை என சுட்டிக்காட்டியுள்ள விஜிதஹேரத் முக்கிய சூத்திரதாரிமுக்கிய விடயங்கள் எதனையும் தெரிவிக்க தவறியுள்ளார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## தேங்காய் எண்ணெய் விவகாரம்:

# விசாரணைக்கு 10 பேர் கொண்ட தனிப் படை!

கொழும்பு, ஏப். 11

இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெயில் புற்றுநோய் காரணியான 'எப்லொடொக்ஷின்' அடங்கியுள்ளமை தொடர்பிலான சிறப்பு விசாரணைகளுக்கு தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது.

சட்ட மா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி தப்புல டி லிவேரா, வழங்கிய ஆலோசனைக்கு அமைவாக இந்த தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது.

அதன்படி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் நிசாந்த டி சொய்ஸாவினால் இக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

உதவி பொலிஸ் அத்தியட்சர் ஒருவரின் கீழான இந்த தனிப்படை சிறப்புக் குழுவின் விசாரணை நடவடிக்கைகளில் பிரதான பொலிஸ் பரிசோதகர் ஒருவர் உட்பட 9 அதிகாரிகள் உள்ளடங்குகின்றனர்.

அத்துடன் இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெயில் புற்றுநோய் காரணிகள் கலந்துள்ளதாக பரவலாக கருத்துப் பகிர்வுகள் இடம்பெற்று வரும் நிலையில், சில பரிசோதனைகளிலும் அவை உறுதி செய்யப்பட்டுள்ளன. அத்துடன் சி.ஐ.டி.க்கும் சில முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருந்தன.

இவ்வாறான நிலையிலேயே, பிரச்னையின் தீவிரத் தன்மையை அவதானித்து, சட்ட மா அதிபர், குறித்த விவகாரம் தொடர்பில் முழுமையான விசாரணை ஒன்றினை முன்னெடுக்க சி.ஐ.டி.க்கு ஆலோசனை வழங்கியதாக சட்ட மா அதிபரின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

## 50 வருடம்...

முறியடிக்கும் நோக்கில் இலங்கை விமானப் படையைச் சேர்ந்த நீச்சல் வீரர் ரோசன் அபேசுந்தர நீச்சல் பயணத்தை ஆரம்பித்துள்ளார்.

நேற்று அதிகாலை 2 மணியளவில் தலைமன்னார் இறங்கு துறையில் இருந்து பாக்கு நீரிணையை நோக்கி தனது பயணத்தை ஆரம்பித்தார். பின்னர் அங்கிருந்து மீண்டும் தலைமன்னார் நோக்கி வருகை தர உள்ளார். இன்று ஞாயிற்றுக் கிழமை அதிகாலை 3 மணியளவில் மீண்டும் தலைமன்னாரை வந்தடைவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## உருத்திரபுரீஸ்வரர்...

றுள்ளது.

குறித்த கலந்துரையாடல் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன் ஆகியோர் தலைமையில் உருத்திரபுரீஸ்வரர் கோயிலின் மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

இதில், கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர், உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

உருத்திரபுரீஸ்ரர் கோயில் வளாகத்தில் அகழ்வுப் பணிகளை முன்னெடுக்கும் கோணத்தில் அப்பகுதியில் பௌத்த விகாரை அமைக்க நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சிக்கலாம் என்பது குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இதன்பின்னர், குறித்த குழுவினர் ஆலய வளாகத்தில் காணப்பட்ட பண்டைய காலத்து கருங்கல் தூண்களையும் பார்வையிட்டிருந்தனர்.

## திரையரங்குகளை...

மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் தீவிரமாக உள்ள நிலையில் தனியார் கல்வி நிலையங்கள், திருமண மண்டபங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

எனினும் திரையரங்குகளை மூடவில்லை என்று எமக்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அது தொடர்பில் ஆராயப்பட்டது. அதனால் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள அனைத்து திரையரங்குகளும் மறு அறிவித்தல்வரை மூடப்படுகின்றன" என்றும் அவர் தெரிவித்தார்.

## மாகாண சபை...

அனைத்தும் இந்தத் தேர்தலை இணைந்தே சந்திக்கும் எனத் தெரிவித்த அவர், தனித் தனியாக தேர்தலை சந்திப்பதற்கான சூழ் நிலை இல்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

மாகாண சகைளுக்கான தேர்தல்களை எந்த முறையில் நடத்துவது என்பது குறித்து இரண்டு விதமான கருத்துக்கள் முன்வைக்கப்படுவதாகவும் தெரிவித்த அவர், எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறும் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இந்த விவகாரத்துக்கு இறுதி முடிவு எடுக்கப்பட்டு விடும் எனவும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது...!

தண்ணீர் குடிக்கும்போது அல்லது சாப்பிடும்போது ‘விக்கல்’ ஏற்பட்டால் உடனே தலையில் தட்டி, யாரோ நினைக்கிறார்கள் என்போம்.

வாசற்படியில் நாம் இடித்துக் கொண்டு, வாசல் இடித்துவிட்டது என்று கூறுவது போலத்தான் இதுவும்.

அதாவது, நமது தொண்டையில் மூச்சுக் குழல், உணவுக் குழல் இரண்டும் சந்திக்கின்றன. உணவுக் குழலுக்குள் செல்ல வேண்டிய உணவோ, எச்சிலோ, தண்ணீரோ மூச்சுக் குழலுக்குள் செல்லும்போது தான் ‘விக்கல்” ஏற்படுகிறது.

பொதுவாக உணவு அல்லது நீர் அருந்தும்போது, வேறு எதையோ நினைத்துக்கொண்டு, அவசர அவசரமாக உண்ணும்போதோ, குடிக்கும்போதோ தான் விக்கல் ஏற்படுகிறது.

அதிலும் குறிப்பாக, உண்ணுவதையே மறந்து நாம் எதையோ நினைத்துக் கொண்டு உண்ணும் போது அல்லது குடிக்கும் போதுதான் விக்கல் ஏற்படும்.

அதாவது, நாம் வேறு எதையோ, அல்லது யாரையோ நினைப்பதால் விக்கல் ஏற்பட, நாமோ யாரோ நம்மைப் பற்றி நினைப்பதாக எண்ணிக்கொண்டிருக்கின்றோம்.

நமது அரசியல் விமர்சகர்கள் பலரும் எழுதும் கருத்துக்களை படிக்கின்றபோது இது ஞாபகத்திற்கு வருகின்றது. அதற்காக இந்த ஊர்க்குருவி எழுதுவது ஏதோ வேத வாக்கு என்றும் சொல்லி விடப்போவதில்லை. விக்கல் வரும்போது யாரோ நினைப்பது என்ற நம்பிக்கைபோலவும் சிலவேளை இருக்கலாம்.

கூட்டமைப்பில் என்ன நடந்தாலும் சுமந்திரனே காரணம் என்றும், சுமந்திரன் செய்வதெல்லாவற்றையும் சம்பந்தன் மறுப்பின்றி பார்த்துக் கொண்டிருக்கிறார் என்றே எல்லோரும் விமர்சித்துக்கொண்டிருக்கின்றனர்.

ஆனால் அப்படி இல்லை, சம்பந்தனும் சேர்ந்து தான் அந்த முடிவுகளை எடுக்கிறார் என்பதை அண்மையில் நிரூபித்திருக்கிறார் சம்பந்தன் ஐயா.

நமது மூத்த நிர்வாக அதிகாரி சிவஞானசோதி அவர்கள் கடந்த வாரம் காலம் ஆகியிருந்தார்.

ஒரு நல்ல அதிகாரியை தமிழ் சமூகம் இழந்திருந்தது. சிவஞானசோதியை அறிந்தவர்கள் அனைவருக்குமே இது ஒரு சோகம் தரும் செய்திதான்.

அவரது இந்தச் செய்தியை பார்த்ததும், இந்த ஊர்க்குருவிக்கு முதலில் ஞாபகம் வந்தது அவர் பற்றி சில மாதங்களுக்கு முன்னர் வந்த செய்தி ஒன்றுதான்.

சிவஞானசோதி நல்லாட்சி அரசின்போது முக்கிய அமைச்சு ஒன்றின் செயலாளராக இருந்தவர். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அந்த அமைச்சின் மூலமே வடக்கு கிழக்கிற்கு அப்போது பெருந்தொகை நிதி ஒதுக்கப்பட்டு அபிவிருத்திப் பணிகள் நடந்தன. இதனால் அவருடன் சுமந்திரன் நெருக்கமாக பணியாற்ற வேண்டி வந்தது.

இந்த நெருக்கத்தை பார்த்த பல ஊடகர்களும் அவரையே சுமந்திரன் அடுத்த முதலமைச்சர் வேட்பாளராக்க முடிவெடுத்திருக்கிறார் என்று எழுதத் தொடங்கியிருந்தனர். ஏதோ சுமந்திரனே இதுபோன்ற முடிவுகளை எடுத்து தன்னிச்சையாக நடந்தகொள்வதுபோலவும் எழுதியிருந்தனர்.

ஆனால் சிவஞானசோதியின் மறைவையொட்டி கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயா வெளியிட்ட இரங்கல் செய்தியைக் கவனித்தவர்கள் அதனுள் இருந்த ஒரு தகவலை கவனித்திருப்பார்களோ தெரியவில்லை.

‘எதிர்காலத்திலும் அவரது சேவை தமிழ்மக்களுக்கு மிகவும் இன்றியமையாததொன்றாகவே இருந்தது. இதனை பலரும் உணர்ந்திருந்தார்கள். அவரை மக்கள் சேவைக்கு அழைத்து வருவதற்கான சமிக்ஞைகள் பலவற்றையும் எமது கட்சியின் உறுப்பினர்களும், புத்திஜீவிகளும் வலியுறுத்தியிருந்தனர்.’

தனது இரங்கல் செய்தியில் இவ்வாறு சம்பந்தன் தெரிவித்திருப்பதன் அர்த்தத்தை புரிந்துகொண்டால், அந்தச் செய்தி உண்மையானதுதான் என்பதை புரிந்தகொள்ளலாம்.

ஆனால் அது சுமந்திரனின் விருப்பம் மட்டுமல்ல, சம்பந்தன் ஐயாவின் விருப்பமும்தான்!

மாவை இப்போதைக்கு தப்பிவிட்டார்.

**- ஊர்க்குருவி.**

### புதிய அரசமைப்பில்

# சைவத்துக்கு முன்னுரிமை கோரி சச்சிதானந்தம் உணவு தவிர்ப்பு!

**யாழ்ப்பாணம்,ஏப்.11**

**புதிய அரசமைப்பில் சைவ சமயத்துக்கு முன்னுரிமை கோரி இலங்கையின் 11 மாவட்டங்களில் நேற்றுக் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை உணவு தவிர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.**




இந்நிலையில், யாழில் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தத்தின் ஏற்பாட்டில் உணவு தவிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது சச்சிதானந்தம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்:

சைவ சமயத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டால் மத மாற்றிகள் மூலம் சைவ சமயத்திலிருந்து வேறு மதத்துக்கு மக்கள் செல்லமாட்டார்கள். அத்தோடு சைவத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டால் பௌத்த மதமும் இந்து மதமும் பாதுகாக்கப்படும். இல்லாவிட்டால் இரண்டு மதங்களும் மதமாற்றிகளால்

குறிப்பாக கிழக்கு இலங்கையில் மதமாற்றிகளின் செயல்பாடு அதிகரித்துக் காணப்படுகின்றது. அதேபோன்று இந்து மக்கள் பசுவை கோமாதா என வணங்குகின்றோம்.

ஆனால், இங்கே மாடுகளை வெட்டி உண்கிறார்கள். அதனையும் நிறுத்தக் கோருகின்றோம். அதாவது பாலைவனங்களில் தான் மாடுகளை அறுத்து உண்பார்கள். ஆனால், இலங்கை ஒரு சோலைவனம். இங்கே மாடுகளை கோமாதாவாக வணங்கி அவைகளைப் பாதுகாக்க வேண்டும். எனவே, இலங்கையில் மாடுகள் வெட் டுவதை நிறுத்த வேண்டும்- என்றார். (எ)

# காத்தான்குடியில் வைத்து கைது செய்யப்பட்ட கொள்ளையர்களிடமிருந்து கைக்குண்டு மீட்பு!

*காத்தான்குடி,ஏப்.11*

மட்டக்களப்பு, காத்தான்குடியில் வைத்து கைது செய்யப்பட்ட இரு கொள்ளையர்களின் மோட்டார் சைக்கிளிலிருந்து கைக்குண்டு மீட்கப்பட்டது.

அண்மைக் காலமாக தாளங்குடா, பூசொச்சிமுனை போன்ற பிரதேசங்களில் வீதிகளால் தனிமையில் செல்லும் பெண்களை கொள்ளையர்கள் இலக்குவைத்து மோட்டார் சைக்கிளில் அவர்களைப் பின் தொடர்ந்து அவர்களின் கழுத்தில் இருக்கும் தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பியோடிவருகின்ற சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இந்நிலையில் கடந்த வியாழக்கிழமை தனிமையில் வீதியால் சென்ற பெண் ஒருவரின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து சென்ற கொள்ளையர்கள் அறுத்துக் கொண்டு தப்பியோடியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் காத்தான்குடி பூநொச்சிமுனை பகுதியைச் சேர்ந்த 20,19 வயதுடைய இருவரை கைது செய்ததுடன் 2 பவுண் தங்கச்சங்கிலி ஒன்றையும் கொள்ளைக்குப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் ஒன்றையும் பறிமுதல் செய்தனர்.

இதன்போது கைது செய்யப்பட்டவர்களிடம் தொடர்ந்து மேற்கொண்ட விசாணையில் கொள்ளைக்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கைக்குண்டு ஒன்றை மீட்டுள்ளதாகவும் தொடர்ந்து விசாரணை இடம்பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# யாழ். போதனா வைத்தியசாலை தொழிலாளர் பணிப்புறக்கணிப்பு

*கொழும்பு,ஏப்.11*

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சுத்திகரிப்பு தொழிலில் ஈடுபடும் பணியாளர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர். வாடகைக்கு அமர்த்தப்பட்ட தனியார் நிறுவன மொன்றில் ஒப்பந்த அடிப்படையில் யாழ். போதனா வைத்திய சாலையில் சுத்திகரிப்பு பணியில் ஈடுபடும் தொழிலாளர்களே நேற்று இவ்வாறு பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டனர்.

தமக்கு வழமையாக நாளொன்றுக்கு 1040 ரூபாய் வழங்கப்பட்டதாகவும் எனினும் தற்போது 900 ரூபாய் மட்டமே வழங்கப்படுவதாகவும் எனவே ஏற்கனவே வழங்கப்பட்ட 1040 ரூபாயை வழங்கக் கோரியே பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர். 130 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இவ்வாறு பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். (எ)






**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
11.04.2021 ஞாயிற்றுக்கிழமை
சார்வரி, பங்குனி 29

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

## மாநகர முதல்வர் விவகாரம்

யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் கைது செய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். ஆரம்பத்தில் அவர் கைதுசெய்யப்பட்டு, பயங்கரவாத தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டாலும்கூட, பின்னர், தண்டனை கோவைச் சட்டத்தின் கீழ்தான் அவருக்கு எதிரான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மணிவண்ணன் பிணையில் விடுதலை செய்யப்படுவதற்கு முன்னதாகவே, கடற்றொழில் அமைச்சரும் யாழ் மாநகர சபையில் மணிவண்ணனுக்கு ஆதரவளித்துவரும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா, மணிவண்ணனுக்கு மன்னிப்பை வழங்கி, அவரை பிணையில் விடுதலை செய்யுமாறு, தான் ஜனாதிபதியிடம் கோரியிருப்பதாகவும், அந்த அடிப்படையில், அவருக்கு முதல் மன்னிப்பு வழங்கப்படுவதாகவும், எதிர்காலத்தில் இதுபோன்ற சிக்கல்களில் மாட்டிக்கொண்டால் அவர் கடுமையான நடவடிக்கைகளை எதிர்கொள்ள நேரிடும் என்றும் செய்தி ஊடமொன்றிடம் தெரிவித்திருந்தார். டக்ளஸ் கூறியது போன்றே மணிவண்ணன் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கின்றார்.

மணிவண்ணன் கைதுக்கு அவர் உருவாக்கிய காவல் படையின் சீருடையே காரணம், அது, விடுதலைப் புலிகளை மீளுருவாக்கம் செய்யும் நோக்கம் கொண்டதாக தெரிகின்றது என, பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்திருக்கின்றார். விடயங்களை மேற்கொள்ளும்போது, ஒவ்வொரு விடயங்களிலும் நிதானத்தை கடைப்பிடிக்கவேண்டும் என்பதையே தற்போதை சம்பவம் சுட்டிக்காட்டுகின்றது. அதேவேளை, எதிர்காலத்தில் மாநகர நிர்வாகத்தை மேற்கொள்ளும்போது, ஏனைய அதிகார தரப்பினருடன் புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதையும் இந்த விடயம் சுட்டிக்காட்டுகின்றது.

மாகாண சபை உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து, அனைத்தும் பரஸ்பர சந்தேகத்தின் அடிப்படையிலேயே முன்னெடுக்கப்பட்டிருந்தன. 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில், குறிப்பாக அதிலுள்ள காணி, பொலிஸ் அதிகாரம் தொடர்பில், கொழும்பில் அதிகாரத்தை கைப்பற்றும் அரசாங்கங்கள், முழு விருப்பத்துடன் விடயங்களை கையாளக் கூடிய மனோநிலையில் இல்லை. இந்தியா தங்கள்மீது திணித்த ஒன்றாகவே அவை இப்போதும் 13ஆவது திருத்தத்தை பார்க்கின்றன. பொலிஸ் அதிகாரத்தை தமிழர்களுக்கு வழங்கினால் அவர்கள் வடக்கு கிழக்கிற்கான தமிழ் படையாக மாறிவிடுவார்கள் என்னும் அச்ச மனோநிலையொன்று கொழும்பை பீடித்திருக்கின்றது. இது, தேவையற்ற அச்சம்தான். ஆனால், கொழும்பின் ஆட்சியாளர்கள் இதிலிருந்து இன்றுவரையில் விடுபடவில்லை. இவ்வாறானதொரு சூழலில்தான், விடுதலைப் புலிகளது காவல் துறையின் சீருடையை நினைவுபடுத்துவதாக கூறி, மணிவண்ணன் கைது செய்யப்பட்டு, விடுவிக்கப்பட்டிருக்கின்றார்.

பொதுவாக, மாநிலத்தில் நிர்வாகத்தை திறம்பட முன்னெடுக்க வேண்டுமாயின், மத்தியின் ஒத்தாசை அவசியம். வடக்கு கிழக்கில் மாகாண சபைகளை திறம்பட முன்னெடுப்பதில் மத்திக்கும் தமிழர்களுக்கும் இடையில் காணப்படும் பல்வேறு இடைவெளிகளே பிரதான பிரச்னையாக இருக்கின்றது. இந்த விடயத்தை கையாளுவதற்கு தமிழ் அரசியல் தரப்புக்கள் ஒரு தெளிவான பொறிமுறையை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். தமிழ் மக்களின் ஒட்டுமொத்த அரசியல் அபிலாஷைகள் தொடர்பான விடயங்களை கவனிப்பதையும், அதனை கையாளுவதையும் பாராளுமன்ற உறுப்பினர்களும் - ஏனைய விடயங்களான மாகாண மற்றும் உளளூராட்சி மன்றங்களின் ஊடாக மேற்கொள்ளக் கூடிய விடயங்களை பிரத்தியேகமாக கையாளுவது தொடர்பிலும் தமிழர் தரப்புக்கள் சிந்திக்கவேண்டும். எல்லாவற்றிலும் தமிழ்த் தேசியம் பேச முற்படும் அரசியல் அணுகுமுறை பொருத்தமானதா என்னும் கேள்வியை தமிழர் தரப்புக்கள் தங்களுக்குள் கேட்டுக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால், இவ்வாறான பிரச்னைகளை அடிக்கடி எதிர்கொள்ளும் நிலைமை ஏற்படலாம்.

# சமல் - பொன்சேகா சபையில் மோதல் - நடந்தது என்ன?





*இறுதிப்போரை வழிநடத்திய முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கும், அமைச்சர் சமல் ராஜபக்சவுக்குமிடையில் சபையில் கடும் சொற்போர் மூண்டது. இருவரும் சரமாரியாக சொற்கணைகளைத் தொடுத்துக்கொண்டனர். இடையிடையே சபை நாகரீகமற்ற வார்த்தைப் பிரயோகங்களும் இடம்பெற்றன.*

*பாராளுமன்றம் கடந்த 8ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மகிந்தயாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.*

*சபாநாயகர் அறிவிப்பு வேளையின்போது, ரஞ்சன் ராமநாயக்க விவகாரம் தொடர்பில் சபாநாயகர் விளக்கமளித்தார். ஏன் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பாராளுமன்ற உறுப்புரிமையை இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டது என்பதற்கான காரணங்களையும் விவரித்தார். அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் நேற்று முன்தினம் சபையில் நடத்துக் கொண்ட விதம் குறித்தும் கவலை வெளியிட்டார்.*

*சபாநாயகரின் அறிவிப்பின் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கருத்து வெளியிட்டார்.*

*"மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்துவதற்கான உரிமை ரஞ்சன் ராமநாயக்கவுக்கு இருக்கின்றது. நிலைமை அப்படி இருக்கையில் ஏன் அவரின் நாடாளுமன்ற உறுப்புரிமையை நீக்குவதற்கு அவசரமாக நடவடிக்கை எடுக்கப்பட்டது. தேர்தல் ஆணைக்குழுவுக்கு கடிதம் அனுப்பட்டது. ரஞ்சன் ராமநாயக்க விவகாரத்தில் சபாநாயகர் கையாண்ட அணுகுமுறை தவறானதாகும். ரஞ்சனுக்கான உரிமைகள் மறுக்கப்படக் கூடாது. உயர்நீதிமன்றத்தை நாடுவதற்கான உரிமை அவருக்கு இருக்கின்றது." - என்று எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டியதுடன், சபாநாயகரின் செயலுக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டார்.*

*அதன்பின்னர் தமது தரப்பு நியாயத்தை சபாநாயகர் முன்வைத்தார். அரசமைப்பின் பிரகாரமே தான் செயற்பட்டதாக குறிப்பிட்டதுடன், தேர்தல் ஆணைக்குழுவுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தை நாடமுடியும் எனக் குறிப்பிட்டார்.*

*இதன்போது ஒழுங்குப் பிரச்னையொன்றை எழுப்பிய முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா,*

*"இராணுவத்திலுள்ள காட்டு நீதிமன்றமொன்றால் எனக்கு தண்டனை வழங்கப்பட்டது. சிறை வைக்கப்பட்டேன். குறித்த தீர்ப்புக்கு எதிராக 3 நீதிமன்றங்களில் மேன்முறையீடு செய்திருந்தேன். இவ்வாறு மேன்முறையீடு செய்திருந்தும் எனக்கு நாடாளுமன்றம் வருவதற்கான வாய்ப்பை அப்போதைய சபாநாயகர் (சமல் ராஜபக்ச) வழங்கவில்லை." - என்றார்.*

*இதன்போது எழுந்த அமைச்சர் சமல் ராஜபக்ச, "நாடாளுமன்றம் வருவதற்கு அனுமதி வழங்கினேன்." - என்றார்.*

*பதிலுக்கு "நான் என்ன சொன்னேன் என்று விளங்கியதா" என பொன்சேகா கேட்டார்.*

*"என்ன என்று கேட்கிறாயா, நான் உமக்கு அனுமதி வழங்கவில்லையா" என சமல் பதிலளித்தார்.*

*"நான் சொல்வதை கேளும்" - என்றான் பொன்சேகா.*


*"என்ன ஐசே கேட்பது, உன்னுடைய பலத்தை காட்ட முற்படுகின்றாயா, நீதான் மடயன். வெளியில் வா காட்டுகின்றேன்." - என்றார் சமல் ராஜபக்ஷ.*

*இவ்வாறு இருவருக்குமிடையில் சொற்போர் இடம்பெற்றுக்கொண்டிருக்கையில் ஆளும் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களும் கூச்சல் குழப்பத்தில் ஈடுபட்டனர்.*

*சமல் ராஜபக்ஷவை சூழ்ந்துகொண்ட ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பொன்சேகாவை நோக்கி விமர்சனக் கணைகளைத் தொடுத்தனர். சபைக்கு நடுவில் வந்தும் கூச்சலிட்டனர். பதிலுக்கு ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களும் கருத்து கணைகளைத் தொடுத்தனர். இதனால் சபையில் கடும் அமளி துமளி ஏற்பட்டது. இதனால் சபை நடவடிக்கைகளை ஐந்து நிமிடங்களுக்கு சபாநாயகர் ஒத்திவைத்தார்.*

*சுமார் 20 நிமிடங்களுக்கு பின்னர் சபை கூடியது. இதன்போது "எவ்வளவு செய்தாலும் நன்றி இல்லை. எனது கருத்து எவரின் மனதையாவது புண்படுத்தியிருந்தால் வருந்துகின்றேன்." - என குறிப்பிட்டார்.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்** பொறுமையுடன் செயல்பட்டு வெற்றி அடைவீர்கள். கொண்டாட வேண்டியநாள். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். கோயில்களுக்குச் செல்வீர்கள். எதிர்பாராத சந்திப்பு உண்டு.

**இடபம்** குடும்ப சூழலால் மன நிறைவும், நிம்மதியும் ஏற்படும். பொல்லாதவர்களால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். பண விவகாரங்களில் கவனமாக இருப்பது நல்லது.

**மிதுனம்** ஆரோக்கியத்தில் அதிக அக்கறையுடன் இருங்கள். ஜாமீன் கையெழுத்து போடுவதை தவிர்க்க வேண்டிய நாள். செலவுகளை சமாளிக்கக் கடன் வாங்காதீர்கள்.

**கடகம்** மகிழ்ச்சி காரணமாக குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். வம்பு பேசியவர்கள் வாயடைத்துப் போகும்படி சம்பவம் நடக்கும். மற்றவர்களை மட்டம் தட்டுவது போல் நடந்து கொள்ளாதீர்கள்.

**சிம்மம்** பேச்சில் கவனம் தேவை. பணத்தை பத்திரமாகக் கையாளுங்கள். நீண்ட நாளாக தள்ளிப்போட்ட விஷயங்களை முடிக்கும் நாள். பெருமை வந்து சேரும். பிரச்னைகள் படிப்படியாக தீரும்.

**கன்னி** வீடு மாறுவது பற்றி முடிவு செய்வீர்கள். நகை வாங்குவீர்கள். நண்பர் ஒருவர் உதவி செய்வார். வீண் செலவுகள் குறையும். பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும். தீயவர்களை விட்டு விலகுவீர்கள்.

**துலாம்** உற்சாகத்தோடு பணிபுரிந்து அதிகாரியின் பாராட்டை பெறுவீர்கள். குடும்ப விவகாரங்களில் அக்கறை கொள்வீர்கள். நிம்மதி கூடும். இன்றைய நாள் அமைதியாகச் செல்லும். ஓய்வு அதிகரிக்கும்.

**விருட்சிகம்** பணியாளர்கள் முனைப்புடன் செயல்பட்டு பதவி உயர்வு உண்டு. ஊக்கத்தோடு செயல்படுவீர் கள். நீண்ட நாள் கவலை ஒன்று தீரும். சிந்தனை செயல் வடிவம் பெறும். தாமதப்பட்ட நன்மை தேடி வரும்.

**தனுசு** இன்று முழுக்க மற்றவர் பிரச்னையை தீர்ப்பது பற்றி யோசிப்பீர்கள். சிறு சிறு கவலைகள் தோன் றும். நட்பு வட்டம் விரியும். சில தீயவர்கள் உங் களை விட்டு விலகுவது நன்மைக்கே.

**மகரம்** பல நாள் முயற்சி ஒன்று கைகூடுவதால் மகிழ்ச்சி வரும். நட்பு வட்டத்தில் ஏற்படும் விரிசல் உங்களை பாதிக்காது. அலுவலகத்தில் மதியத்திற்கு மேல் நற்செய்தி ஒன்று வரும்.

**கும்பம்** பழைய முதலீடுகள் லாபம் தருவது பற்றிய செய்தி வரும். சுவையான விருந்து உண்டு மகிழ்வீர்கள். கவலை தீரும். வேலைகளை இழுத்து போட்டுச் செய்வதால் அசதி வரும்.

**மீனம்** கடந்த சில நாளாக இருந்து வந்த அதிருப்தி தீரும். குடும்பத்திலுள்ள ஒருவரால் ஏற்பட்ட மனக்குறை நீங்கும். பணிகளை முனைந்து செய்வதால் அலுவலகத்தில் புகழ் கூடும்.

# பொலிஸாரின் 24 மணி நேர கண்காணிப்பு பணி ஆரம்பம்!

கொழும்பு, ஏப். 11

பண்டிகை காலத்தில் விபத்துக்களை குறைப்பதற்கான சிறப்பு நடவடிக்கையை பொலிசார் இன்று தொடங்கியுள்ளனர்.

மோட்டார் வாகன விபத்துக்களைத் தடுக்கவும், தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறுபவர்களை அடையாளம் காணவும் 24 மணிநேர நடவடிக்கைகள் நாடு முழுவதும் மேற்கொள்ளப்படும் என பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

பொலிஸார் சீருடையில் மற்றும் சிவில் உடையில் நடவடிக்கையில் ஈடுபடுவார்கள் என அவர் தெரிவித்தார்.

ஒருவரின் பணியிடத்தில் சமூக இடைவெளியை பராமரித்தல் மற்றும் கைகளைக் கழுவுதல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார்.

பண்டிகைக் காலங்களில், மதுபானம் மற்றும் போதையூட்டும் மருந்துகளை பாவித்து விட்டு வாகனம் செலுத்துபவர்களை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுப்பர்.

# கட்டிலின் கீழ் உரப்பையில் சுற்றிய நிலையில் மனைவியின் சடலம் மீட்பு! கணவன் கைது!!

புத்தளம்,ஏப்.11

கணவன் பொல்லால் தாக்கியதில் மனைவி உயிரிழந்த சம்பவமொன்று புத்தளத்தில் பதிவாகியுள்ளது.

புத்தளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முல்லிபுரம் பகுதியில் இக்கொலை இடம்பெற்றுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

புத்தளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முல்லிபுரம் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றிலிருந்து நேற்றுச் சனிக்கிழமை பெண்ணொருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

இதுதொடர்பில் புத்தளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். இதற்கமைய வெட்டாலை பகுதியைச் சேர்ந்த 29 வயது பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்தார் என பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

உயிரிழந்த பெண்ணுக்கும் அவரது கணவருக்கும் இடையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு ஏற்பட்ட முரண்பாட்டில் கோபமடைந்த கணவன், மனைவியை பொல்லால் தாக்கிக் கொலை செய்துள்ளதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் அவரது மனைவியின் சடலத்தை உரைப்பையில் மூடி கட்டிலின் கீழ் மறைத்து வைத்ததுடன், அன்றைய தினம் இரவு சடலத்தை வேறு பிரதேசத்துக்கு எடுத்துச் சென்று மறைத்து வைக்கவும் திட்டமிட்டிருந்தார்.

எனினும் பொலிஸாருக்கு தகவல்கள் கிடைக்கப்பெற்றதை அடுத்து கட்டிலின் கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

35 வயதுடைய குறித்த சந்தேகநபரை கைதுசெய்து புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## 12ஆம், 13ஆம் திகதிகளில் கடைகளைத் திறக்கவும்!

கொழும்பு, ஏப். 11

எதிர்வரும் 12, 13ஆம் திகதிகளில் அனைத்து வர்த்தக நிலையங்களையும் திறக்குமாறு வர்த்தக அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

புத்தாண்டை முன்னிட்டு 12ஆம் திகதி பொது விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த கோரிக்கையை விடுத்துள்ளது.

## கைதிகளை பார்வையிடலாம்

கொழும்பு,ஏப்.11

சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு நாளை 13 மற்றும் நாளை மறுதினம் 14 ஆம் திகதிகளில் குடும்பத்தினர் கைதிகளைப் பார்வையிட முடியும். எனினும், அவர்களுக்கு உணவுப் பொருள்களை வழங்க முடியாது என்று சிறைச்சாலைகள் திணைக்கள ஊடகப் பேச்சாளர், ஆணையாளர் (புனர்வாழ்வு மற்றும் நிர்வாகம்) சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக சிறைக் கைதிகளுக்கு அவர்களது குடும்பத்தினரால் வழங்கப்பட்ட உணவுகள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. இந்நிலையில், இவர்களுக்கான உணவை சிறைச்சாலையின் உணவகத்தில் வழங்கப்பட்டதுடன், அதற்காக கைதிகளின் குடும்பத்தினரால் வாரத்துக்கு 2,000 ரூபாய் பணத்தை உணவகம் பெற்றுக்கொண்டிருந்தது. இதன்போது சிறைக்கைதிகளை மாதத்துக்கு ஒரு முறையும், சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை வாரத்துக்கு ஒருமுறையும் அவர்களது குடும்பத்தினர் பார்வையிடுவதற்கு அனுமதிவழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் சிறைக் கைதிகள் மற்றும் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை அவர்களது குடும்பத்தினர் பார்வையிட முடியும்.

இதன்போது கைதிகளை பார்வையிட வருபவர் கள் உரிய சுகாதார சட்டவிதிகளைப் பின்பற்றி இருப்பதுடன் ,சிறைச்சாலை சட்டவிதிகளுக்கு அமைவாகவும் வருகை தந்திருக்க வேண்டியது கட்டாயமாகும்- என்றார். (ஏ)



## 18 கிலோ கொழுந்துதான் பறிப்போம்

### தொழிலாளர்கள் திட்டவட்டம்

கொழும்பு, ஏப். 11

பெருந்தோட்டங்களில் மேலதிகமாக கொய்யப்படும் தேயிலைத் தளிர்களுக்கு கூடுதல் கொடுப்பனவுகளை வழங்க முடியாதென தோட்ட முகாமைத்துவம் கூறியதால், தொழிலாளர்கள் இன்று ஒரு தினம் அடையாள வேலை நிறுத்தம் செய்துவிட்டு, இனிமேல் கூடுதலாக தேயிலைத் தளிர்கள் பறிப்பதில்லையென்ற போராட்டத்தை தொடரவுள்ளனர்.

வெலிமடைப் பகுதியின் அலகொல்லை பெருந்தோட்டத்திலேயே மேற்படி போராட்டம் இடம்பெற்று வருகின்றது.

தினமொன்றிற்கு தோட்ட முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்பட்ட 18 கிலோ தேயிலைத் தளிர்களை மட்டுமே தொடர்ந்து கொய்வதற்கு, தொழிலாளர்கள் கட்சி, சங்க பேதங்களின்றி தீர்மானித்து, அப் போராட்டத்தை தொடர்வதற்கும் முடிவு செய்துள்ளனர்.

ஏற்கனவே, தொழிலாளர்கள், தோட்ட முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்பட்ட தேயிலைத் தளிர் கிலோ கிராம் எடையை விட கூடுதலாக தேயிலைத் தளிர்களை கொய்த போதிலும், கூடுதலாக கொய்யும் தேயிலைத் தளிர்களுக்கு கூடுதல் கொடுப்பனவுகளை வழங்க முடியாதென்று, தோட்ட முகாமைத்துவம் உறுதியாக கூறினர். இதையடுத்து, தொழிலாளர்கள் கூடுதல் தேயிலைத் தளிர்களை கொய்வதில்லை. தினமொன்றிற்கு தீர்மானித்தபடியே, தேயிலைத் தளிர்களை கொய்யவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் பிரச்னைகளுக்கு செவிசாய்க்கவில்லை அரசு

## எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 11

**அரசாங்கத்தின் குறுகிய பார்வை கொண்ட பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக பொதுமக்கள் பாதிப்படைவதாக எதிர்க்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.**

நெேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மார்க்கார், அரசாங்கத்தின் முடிவுகள் வர்த்தமானி அறிவிப்புகளுக்கு மட்டுமே என்றும் குற்றம் சாட்டினார்.

அரசாங்கம் சந்தர்ப்பவாத அரசியலைப் பின்பற்றுகிறது என்றும் மக்களின் பிரச்னைகளுக்கு செவிசாய்க்க தவறியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பணப் பரிவர்த்தனைகள் அதிகரிப்பதன் காரணமாக பொருட்களின் விலைகள் உயர்வதாகவும் இதன் காரணமாக மக்கள் கடும் பிரச்னைகளை எதிர்கொள்வதாகவும் இம்தியாஸ் பாக்கீர் மார்க்கார் குறிப்பிட்டார்.

வர்த்தமானி அறிவிப்புகள் வெளியிடப்படுகின்றதே அன்றி பொருளாதாரத்துக்கு பயனளிக்கும் வகையில் அவை செயற்படுத்தப்படவில்லை என்றும் அவர் கூறினார். (அ)

# பங்காளிகளின் தனிவழி சந்திப்பால் கடும் சீற்றத்தில் மொட்டுக் கட்சி

கொழும்பு, ஏப். 11

சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 11 பங்காளிக்கட்சிகள் மீண்டுமொருமுறை தனிச்சந்திப் பொன்றை நடத்தியுள்ளமை குறித்து அரசியல் களத்தில் பலகோணங்களில் கருத்துகள் முன்வைக்கப்பட்டுவருகின்றன.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையகத்தில் அக்கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையிலேயே கடந்த வியாழன் இரவு இச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

தேசிய சுதந்திர முன்னணி, தூய ஹெல உறுமய, ஜன நாயக இடதுசாரி முன்னணி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உட்பட 11 கட்சிகளின் தலைவர்கள் சந்திப்பில் பங்கேற்றனர் என அமைச்சர் உதய கம்மன் பில தெரிவித்தார்.

மாகாணசபைத் தேர்தலை நடத்துவது தொடர்பான புதிய சட்டம், மே தினம் உட்பட சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன என்று சுதந்திரக்கட்சியின் உப தலைவரான அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்தார்.

அதேவேளை, அரசிலிருந்து விலகி தனிவழி செல்வதற்கான நகர்வா இதுவென எழுப்பட்ட கேள்விக்கு, இல்லை என அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா பதிலளித்தார்.

மே தினம் தனித்தா அனுஷ்டிக்கப்படும் என்ற கேள்விக்கு, கூட்டாகவும், தனித்தும் அனுஷ்டிப்பதற்கான உரிமை உள்ளது. " - என்றார்.

# மணல் அகழ்வுக்கு நீர் வளச் சபையின் அனுமதி அவசியம்

கொழும்பு, ஏப். 11

மணல் அகழ்வுக்கான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு நீர்வளச் சபையின் அனுமதி கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

மணல் அகழ்வு மற்றும் கற்குவாரிகளை நடத்திச் செல்வதாயின் புவிசரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் அனுமதிப்பத்திரத்துக்கு மேலதிகமாக நீர்வளச் சபையின் அனுமதியும் பெற்றுக் கொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டார்.

# புத்தாண்டு கொத்தணியை உருவாக்க வேண்டாம்!

## சுகாதார பரிசோதகர்கள் சங்கம் கோரிக்கை

கொரோனா வைரஸ் பரவலை தடுப்பதற்கான - கட்டுப்படுத்துவதற்கான சுகாதார வழிகாட்டல்களை அனைவரும் முழுமையாக பின்பற்ற வேண்டும் என்று பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"புத்தாண்டை முன்னிட்டு நகரப்பகுதிகளில் மக்கள் நடமாட்டம் அதிகமாக காணப்படுகின்றது. பொதுபோக்குவரத்து உள்ளிட்ட நடவடிக்கைகளின் போது சுகாதார நடைமுறைகள் உரிய வகையில் பின்பற்றுவதாக தெரியவில்லை. எனவே, நடைமுறைகளை முழுமையாக பின்பற்ற வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் புத்தாண்டின் பின்னர் சிகிச்சை நிலையத்தில் இருக்கவேண்டிய நிலைமையே உருவாகும்.

ஆகவே, கொரோனா வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்துவதற்கு மக்கள் முழுமையாக ஒத்துழைப்பு வழங்கவேண்டும். சுகாதார வழிகாட்டல்களை உரிய வகையில் பின்பற்ற வேண்டும்- என்றார். (அ)



# மாடுகளை அறுப்பது அரசியல்வாதிகளே!

## சிவசேனை அமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 11

அரசியல்வாதிகள் தமது அரசியல்பலத்தைப் பயன்படுத்தி சட்டவிரோதமான முறையில் மாடறுப்பு செயற்பாடுகளில் ஈடுபட்டுவருவதாக சிவசேனை அமைப்பின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் தமிழ்த்திரு அ.மாதவன் தெரிவித்தார்.

இலங்கை அரசமைப்பில் சைவசமயத்துக்கு முன்னுரிமை விதி, மதமாற்றத் தடைச்சட்டத்தை ஏற்படுத்து, மாடு வெட்டத் தடை விதி போன்ற கோரிக்கைகளை முன்னிறுத்தி அடையாள உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று வவுனியா சிதம்பரபுரம் பழனிமுருகன் ஆலயத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது பகுதிகளிலும் பசுவதைச் செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. சில அரசியல்வாதிகள் தமது அரசியல் பலத்தை வைத்துக் கொண்டு சட்டத்திற்கு புறம்பான வகையில் அதிகளவான மாடுகளை வெட்டும் செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றனர்.

வவுனியாவை பொறுத்தவரை பசுவதை செயற்பாடுகளை யார் முன்னெடுக்கின்றார்கள் என்பது அனைவருக்குமே தெரிந்திருக்கும். எனவே இந்தச் செயற்பாடுகள் உடனடியாக முற்றாக நிறுத்தப்படவேண்டும். அத்துடன் ஒருவரது மனோநிலையை பயன்படுத்தி மதமாற்றத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. இவை தடுக்கப்பட்டு புதிய அரசமைப்பிலே இந்த விடயங்களும் உள்ளடக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி குறித்த உண்ணாவிரதம் முன்னெடுக்கப்பட்டுள்ளது - என்றார்.

# அதிவேகப் பாதையில் தீப்பற்றி எரிந்த பவுசர்

கொழும்பு, ஏப். 11

கொழும்பிலிருந்து மாத்தறை நோக்கி பயணித்த பவுசர் ஒன்று அதிவேக நெடுஞ்சாலையில் குருந்துகஹஹெதெம்ம நுழைவாயிலுக்கு அருகே நேற்று அதிகாலை விபத்துக்குள்ளாகி தீப்பற்றியுள்ளதாக எல்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த தீப்பரவல் அதிவேக நெடுஞ்சாலையின் தீயணைப்புப் பிரிவினரால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

தீப்பற்றிய பவுசருக்கு பாரிய சேதாரங்கள் ஏற்பட்டுள்ளதுடன், சாரதியின் உதவியாளருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளன.

இதனால் மேலதிக சிகிச்சைகளுக்காக அவர் களுத்துறை நாகொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# நாட்டுக்குள் மற்றுமொரு நாடு உருவாகும் நிலை

## தேசிய பிக்கு முன்னணி அச்சம்

கொழும்பு,ஏப்.11

நாட்டுக்குள் பிறிதொரு நாட்டை உருவாக்கும் வகையில் கொழும்பு துறைமுக நகரப்பொருளாதார ஆணைக்குழு உருவாக்கத்துக்கான சட்டமூலம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் ஆட்சிக் காலத்தை நிறைவு செய்யும் போது நாட்டு மக்களின் எதிர்காலம் எவ்வாறானதாக அமையும் என்ற பாரிய அச்சம் ஏற்பட்டுள்ளது என்று தேசிய பிக்கு முன்னணியின் செயலாளர் வகமுல்லே உதித்த தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில்:

கொழும்பு துறைமுக நகரம் நாட்டின் ஏனைய பொருளாதார வலயங்களைக் காட்டிலும் மாறுபட்ட தன்மையைக் கொண்டுள்ளது. ஒரு நாடு ஒரு சட்டம் என்பது இந்த அரசாங்கத்தின் பெயரளவான கொள்கை மாத்திரமே. கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவானது விஷேட பொருளாதார வலயமாக ஸ்தாபிக்க பதிவு செய்யப்பட்டுள்ளது.

பொருளாதார வலயத்துக்குள் உள்ளடக்கப்படும் நிறுவனங்கள் மற்றும் பொருளாதாரம் வலயத்தை கட்டுப்படுத்தும் சட்டங்கள் கொழும்பு துறைமுக பொருளாதார ஆணைக்குழு ஸ்தாபிப்புக்கான சட்டமூலத்திலிருந்து விடுப்பட்டுள்ளது. இலங்கைக்குப் பொருத்தமற்ற பல விடயங்கள் இந்த ஆணைக்குழுவுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டுக்குள் பிறிதொரு நாட்டை உருவாக்கும் வகையில் கொழும்பு துறைமுக நகரப்பொருளாதார ஆணைக்குழு உருவாக்கப்படவுள்ளது. இலங்கை சீனாவின் கடன் பொறிக்குள் சிக்குண்டுள்ளமை தொடர்பில் சர்வதேச நாடுகள் அதிருப்தி வெளியிட்டுள்ளன. சீனா விடம் கடன் பெறுவதற்கு முன்னர் ஒரு சில நாடுகளின் நிலைமை குறித்து சர்வதேச நாடுகள் ஆராயும் போது அவ்விடத்தில் இலங்கை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடப்படுகிறது. அண்மையில் பங்களாதேஷ் நாட்டு அரசியல் பிரமுகர் இலங்கை சீனா உறவு குறித்து குறிப்பிட்டமை கவனத்திற்குரியது.

நாட்டு மக்கள் பாரிய நெருக்கடியை எதிர் கொண்டுள்ளனர். மன நிம்மதியுடன் உணவு உண்ண முடியாத நிலை காணப்படுகின்றது. இந்த அரசாங்கம் ஆட்சிக் காலத்தை நிறைவு செய்யும் போது நாட்டு மக்களின் எதிர்காலம் எவ்வாறானதாக இருக்கும்? எவருக்கு அடிபணிந்து இருக்க வேண்டும்? என்ற அச்சம் எழுந்துள்ளது. கொழும்பு துறைமுக நகர விவகாரம் குறித்து நாட்டு மக்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும்- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்




## திரு.குருஸ் அருள்நேசவாசன் (ஜெயசீலன்)

யாழ். நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட குருஸ் அருள்நேசவாசன் அவர்கள் 08-04-2021 வியாழக்கிழமை அன்று பிரான்சில் காலமானார். அன்னார், காலஞ்சென்றவர்களான குருஸ் கிறிஸ்தீனம்மா தம்பதிகளின் செல்வப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான யாக்கோபு திரேசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும்,

மரியதாஸ்(ஆசை) அவர்களின் அன்பு மருமகனும், அமலேஸ்வரி (றோஸ்) அவர்களின் அன்புக் கணவரும், ஜெறோன்(பிரான்ஸ்), ஜெனித்தா(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், பிறின்சி(பிரான்ஸ்), சஞ்ஜீவன்(ஜீவன் -பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற புஸ்பராணி, மத்தியாஸ், யுபிறேசியா (சின்னம்மா– இலங்கை), சிங்கராயர்(பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான மனோகரசீலன், ஜேட்றூட், போல் மற்றும் மேரிப்பிள்ளை(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கென்றிக்(பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான வென்சென்சிலாஸ், ரவீந்திரன் மற்றும் கில்பேட்(பிரான்ஸ்), காலஞ்சென்ற அமலதாஸ் (அமலன்), கிளாறம்மா (இலங்கை), மெற்றில்டா(பிரான்ஸ்), சிறப்பீன்(பிரான்ஸ்), றஞ்சிதமலர்(பிரான்ஸ்), ராஜேஸ்வரி(ராசாத்தி– பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெவினியா(பிரான்ஸ்), ஜெனிசியா(பிரான்ஸ்), ஜெயானி(பிரான்ஸ்), யோவான் மத்தியு(பிரான்ஸ்) ஆகியோரின் செல்லப் பேரனும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**நிகழ்வுகள்**

பார்வைக்கு
Saturday , 10 Apr 2021 3:00 PM - 4:00 PM
Sunday, 11 Apr 2021 3:00 PM - 4:00 PM
Monday, 12 Apr 2021 3:00 PM - 4:00 PM
Tuesday, 13 Apr 2021 3:00 PM - 4:00 PM
Wednesday, 14 Apr 2021 9:30 AM - 11:30 AM

**Funérarium**
95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France

**திருப்பலி**
Wednesday, 14 Apr 2021 12:00 PM - 1:00 PM

**Paroisse Ste Geneviève**
22 Rue du Colonel Fabien, 95140 Garges-lès-Gonesse, France

**நல்லடக்கம்**
Wednesday, 14 Apr 2021 2:00 PM
Cimetiere
Rue Hippolyte Bossin, 95140 Garges-lès-Gonesse, France

**தொடர்புகளுக்கு**

| | |
|---|---|
| அமலேஸ்வரி – மனைவி | : +33139861290 |
| ஜெறோன் – மகன் | : +33665651663 |
| ஷஜீவன் – மருமகன் | : +33749887740 |
| இந்திரன் – மருமகன் | : +33627535526 |
| கமிலஸ் – மருமகன் | : +33651910885 |
| பாலன் – மருமகன் | : +33665084843 |
| டயஸ் – பெறாமகன் | : +33629146202 |
| மரியதாஸ்(ஆசை) – தாய் மாமன் | : +14164556222 |
| டக்லஸ் – பெறாமகன் | : +33664819823 |

*முன்னாள் போராளி பெயரில் திறக்கப்பட்ட*

# வீதிப்பெயர்ப்பலகையால் கிளிநொச்சியில் சர்ச்சை!

*தவிசாளரிடம் பொலிஸார் விசாரணை*

**கிளிநொச்சி,ஏப்.11**

**கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியில் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளியின் பெயரில் திறக்கப்பட்ட வீதிப் பெயர்ப் பலகை விவகாரம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் நேற்று விசாரணை மேற்கொண்டுள்ளனர்.**

கரைச்சி பிரதேச சபைக்குச் சொந்தமான குறித்த வீதியின் பெயரை வெற்றிவீதி எனப் பெயரிடப்பட்டு பெயர்ப்பலகையொன்று கடந்த 28.03.2021 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

இதுதொடர்பில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் அறிவுறுத்தலுக்கு அமைய கிளிநொச்சி பொலிஸார் நேற்று கரைச்சி பிரதேச சபைத் தவிசாளரை அழைத்து விசாரணை மேற்கொண்டனர்.

நேற்றுக் காலை 8 மணியளவில் அழைக்கப்பட்ட தவிசாளரிடம் சுமார் ஒரு மணிநேரம் விசாரணைகள் இடம்பெற்றதாக அவர் தெரிவித்தார்.




இதன்போது, குறித்த பெயருக்கு சொந்தமானவர் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளி எனவும், புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்டதன் பின்னர் சமூகமட்ட செயல்பாடுகளில் முன்னின்று உழைத்தமைக்காக அவரது பெயரை பொதுமக்கள் சூட்டியதாகவும் விசாரணைகளின் போது பொலிஸாருக்குத் தெரிவித்ததாக தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் தெரிவித்தார்.

குறித்த வீதியானது பிரதேச சபைகள் சட்டத்துக்கு அமைவாகவோ அல்லது, வர்த்தமானி அறிவித்தல் ஊடாகவோ பிரதேச சபையால் திறந்து வைக்கப்படவில்லை எனவும், பொதுமக்கள் தாமாக முன்வந்து குறித்த வீதிக்குப் பெயர் வைக்க ஏற்பாடு செய்த நிகழ்வில் மக்கள் பிரதிநிதியாக தானும் கலந்து கொண்டதாக குறித்த விசாரணைகளில் தான் குறிப்பிட்டதாகத் தெரிவித்தார்.

குறித்த வீதிப்பெயர்ப்பலகையை அகற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் தவறும் பட்சத்தில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் விடுதலைப்புலிகளை மீள் உருவாக்கும் வகையில் செயல்பட்டதாக நடவடிக்கை எடுக்கப்படும் என அவர்கள் குறிப்பிட்டதாகவும் தவிசாளர் தெரிவித்தார்.

அதற்கு அமைவாக தாம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தவிசாளர் குறிப்பிட்டார். (எ)

# புலனாய்வுத் தகவல் வழங்கியவர்களுக்கு எந்தக்காலத்தில் சம்பளம் நிறுத்தப்பட்டது?

*அரசிடம் விஜித ஹேரத் கேள்வி*

*கொழும்பு,ஏப்.11*

யுத்தகாலத்தில் அரசாங்கத்துக்குப் புலனாய்வுத் தகவல்களைப் பெற்றுக்கொள்ள பயன்படுத்தப்பட்டவர்கள் ஈஸ்டர் தாக்குதலுடன் சம்பந்தப்பட்டிருக்கின்றார்கள். இவ்வாறு அரசாங்கம் சம்பளம் வழங்கிப் பயன்படுத்தியவர்களுக்கு எந்தக் காலத்தில் அவர்களுக்கு சம்பளம் வழங்கியது நிறுத்தப்பட்டது என்பது தொடர்பில் அரசாங்கம் வெளிப்படுத்தவேண்டும். அத்துடன் தற்போது அவர்களின் நிலை என்ன என்பது தொடர்பிலும் இதுவரை அரசாங்கம் பதிலளிக்கவில்லை என தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை மீதான ஆறாவது நாள் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

மைத்திரி, ரணில் அரசாங்கம் புலனாய்வுத் துறையின் தகவல்களின் பிரகாரம் செயல்பட்டிருந்தால் ஈஸ்டர் குண்டுத்தாக்குதலை தடுத்திருக்கலாம். தகவல் கிடைத்தும் அதுதொடர்பில் அசமந்தப் போக்கில் இருந்த கடந்த அரசாங்கம் இந்தத் தாக்குதலின் பொறுப்பிலிருந்து தப்பிக்க முடியாது.

அத்துடன் அரசாங்கத்தால் சம்பளம் வழங்கப்பட்டவர்கள் ஈஸ்டர் தாக்குதலுடன் சம்பந்தப்பட்டிருக்கின்றார்கள். யுத்த காலத்தில் புலனாய்வுத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக முஸ்லிம் நபர்களுக்கு அரசாங்கம் சம்பளம் வழங்கி வைத்திருந்தது. இது அனைவரும் அறிந்த விடயம். அவ்வாறு புலனாய்வுத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக அரசாங்கம் நபர்களை பயன்படுத்தியதும், அவர்களுக்கு சம்பளம் வழங்கியதும் தவறு என நாங்கள் தெரிவிக்கவில்லை.

ஆனால், இவ்வாறு சம்பளம் வழங்கி அரசாங்கம் பயன்படுத்தியவர்களுக்கு எந்த காலத்தில் சம்பளம் வழங்குவது நிறுத்தப்பட்டது? தற்போது அவர்களின் நிலை என்ன? இதுதொடர்பில் எந்தப் பதிலையும் அரசாங்கம் வழங்கவில்லை. இவ்வாறு சம்பளம் வழங்கிப் பயன்படுத்தப்பட்டவர்கள் தற்போதும் அரசியலுக்காகப் பயன்படுத்தப்படுகின்றார்களா? என்ற சந்தேகம் எழுகின்றது.



மேலும், ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை கண்டுபிடித்து, தண்டனை பெற்றுக் கொடுக்கவேண்டும் என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தொடர்ந்து இந்த அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்து வருகிறார். அந்த அழுத்தத்திலிருந்து மீள்வதற்கே, இந்தத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி நௌபர் மௌலவி என அமைச்சர் சரத் வீரசேகர வெளிப்படுத்தியிருக்கின்றார். அமைச்சரின் இந்தக் கூற்று சிறுபிள்ளைத்தனமானதாகும்.

அத்துடன் நௌபர் மௌலவி 2014 இல் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைவர் பக்தாதியுடன் இணைந்துகொண்டு, அவர் இலங்கையில் அந்த அமைப்பின் உறுப்பினராகச் செயல்பட்டு வந்ததாக அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்திருந்தார். 2014 இல் எமது நாட்டில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர் மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்தவர் கோட்டாபய ராஜபக்ஷ. அன்று அந்த அரசாங்கத்துக்கு இதனைத் தடுக்க முடியாமல் போயிருக்கின்றது- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெரும் கடன் சுமையில் அரச திணைக்களங்கள்

## சம்பிக்க ரணவக்க கூறுகிறார்

கொழும்பு, ஏப். 11
நாட்டின் பொருளாதா ரத்தை நேரடியாக பாதிக்கும் அரசு திணைக்களங்கள் கடந்த ஒன்றரை ஆண்டுகளில் எந்த வளர்ச்சியையும் முன்னேற்றத் தையும் அடையவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் பாட் டாளி சம்பிக்க ரணவக்க தெரி வித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் 20 பில்லியன் ரூபா லாபம் ஈட்டிய இலங்கை மின் சார சபை தற்போது 280 மில் லியன் இழப்பைச் சந்தித்து வருவதாக கூறினார்.

இலங்கை மத்திய வங்கி, உள்நாட்டு வருவாய்துறை, இலங்கை சுங்கம், விமான நிலையம் மற்றும் மின்சார சபை ஆகியன அரசாங்கத்தின் மாற்றத்திற்குப் பின்னர் அபி விருத்தி அடையவில்லை என் றும் அவர் சுட்டிக்காட்டினார்.

குறித்த திணைக்களங்கள் அனைத்தும் கடன் மூலமே இயங்குவதாகவும் இது எதிர் மறையான அறிகுறி இல்லை என்றும் பாட்டாளி சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டினார்.

# மணியின் கைதுக்கு சீருடையே காரணம்

## அஜித் ரோஹண கூறுகிறார்




கொழும்பு, ஏப். 11

**சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் பொலி ஸாரால் கைது செய்யப்பட்ட விவகாரத்தில் அரசியல் பழிவாங்கல் எதுவுமில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண ஊடகங்களிடம் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததா வது:-

காவல் கடமையில் ஈடுபடுத் தப்பட்டிருந்த ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த சீருடை தமிழீழ விடுதலைப்புலிகளின் காவல்துறையினரின் சீரு டையை ஒத்தது. இது தமிழீழ விடுதலைப்புலிகளை மீள் உரு வாக்கம் செய்யும் முயற்சிக்கு ஒப்பானதாகும்.

குறித்த ஊழியர்கள், யாழ். மாநகர முதல்வரின் தனிப்பட்ட சிபார்சில் நியமிக்கப்பட்டுள்ள னர் எனவும், அவர்களுக்கான சீருடையும் முதல்வரின் பணிப் புரையின் பேரிலேயே வழங்கப் பட்டுள்ளது எனவும் விசார ணைகளில் தெரியவந்துள்ளது.

இதற்கமைய, யாழ். மாநகர முதல்வரின் மணிவண்ணன் நேற்று முன் தினம் அதிகாலை யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன் தினம் இரவு யாழ்ப்பாணம் நீதிவான் நீதி மன்றத்தில் அவர் முன்னிலைப் படுத் தப்பட்டபோது பிணையில் விடுவிக்கப்பட் டார். எனினும், அவர் மீது தண் டனைச் சட்டக் கோவையின் கீழ் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு மீதான விசாரணை தொடர்ந்து இடம்பெறும்- என்றார்.

# உயிரிழந்துவிட்டார் என பிரேத அறைக்கு கொண்டு செல்லப்பட்டவர் உயிருடன் மீண்டதால் பரபரப்பு!

கொழும்பு, ஏப். 11
திடீர் உடல்நலக் குறைவு காரணமாக மருத் துவமனையில் அனுமதிக்கப்பட்ட நபர் உயிரி ழந்துவிட்டார் எனக் கூறி பிரேத அறைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் அவர் உயிரு டன் மீண்ட சம்பவம் நீர்கொழும்பு பொது வைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவ தாவது:

நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த மீனவர் (வயது-40) ஒருவர் திடீர் உடல்நலக் குறைவி னால் பாதிக்கப்பட்டதை அடுத்து நீர்கொழும்பு பொது வைத்தியசாலைக் கொண்டு செல்லப்பட்டார்.

அவரை பரிசோதித்த நீர்கொழும்பு பொது வைத்தியசாலை வைத்தியர் ஒருவர் குறித்த நபர் உயிரிழந்துவிட்டதை உறுதிப்படுத்தியதை அடுத்து உயிரிழந்ததாகக் கருதப்பட்ட நபரின் சடலம் பிரேத அறைக்கு அனுப்பி வைக்கப் பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், உயிரிழந்ததாகக் கருதப்பட்டு பிரேத அறைக்கு கொண்டு செல்லப்பட்டிருந்த நபரின் சடலத்தைப் பார்வையிடுவதற்காக, அவரது குடும்பத்தார் சென்றவேளை அவரது உடலில் அசைவுகள் காணப்பட்டுள்ளதை அவ தானித்துள்ளனர்.

இது குறித்து மருத்துவமனை தரப்புக்கு தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து, குறித்த நபர் மீண்டும் விடுதிக்கு அனுப்பி வைக்கப் பட்டு பரிசோதிக்கப்பட்டதில் அவர் உயிருடன் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. குறித்த நபரின் உடலில் சீனியின் அளவு குறைவடைந்தமையினால், அவர் சுயநினைவை இழந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்த நிலையில், குறித்த நபர் உயிரிழந்துள்ள தாக உறுதிப்படுத்திய வைத்தியருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை எடுக்க வைத்திய சாலை நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக் கது.

# கொழும்பில் அதிகரிக்கும் கொரோனா தொற்றாளர்கள்

கொழும்பு, ஏப். 11
இலங்கையில், நேற்றுமுன் தினம் கொரோனா தொற்றாளர் களாக அடையாளம் காணப் பட்ட 228 பேரில் 58 பேர் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என கொவிட்-19 தடுப்புக்கான தேசிய செயற் பாட்டு மையம் தெரிவித்துள் ளது.


யாழ். மாவட்டத்தில் 56 பேர், கம்பஹா மாவட்டத்தில் 27 பேர், இரத்தினபுரி மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங் களில் 10 பேர் அத்துடன், புத் தளம் மாவட்டத்தில் 05 பேர் நேற்று முன் தினம் தொற்றாளர் களாக அடையாளம் காணப் பட்டுள்ளனர்.

கண்டி மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில் தலா 03 பேர், பதுளை, கிளிநொச்சி மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் தலா 02 பேர் என்ற அடிப்படையில் அடை யாளம் காணப்பட்டுள்ளனர்.

அம்பாந்தோட்டை, மட்டக் களப்பு, மொனராகலை மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட் டங்களில் தலா ஒருவர் என்ற அடிப்படையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டிலிருந்து வருகை தந்த 45 பேர் அடங்கலாக நேற்று முன்தினம் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என கொவிட் -19 தடுப்பிற்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

# 9 இலட்சத்து 27,645 பேருக்கு இதுவரை தடுப்பூசி செலுத்தல்



கொழும்பு,ஏப்.11
இலங்கையில் இதுவரை 9 இலட்சத்து 27 ஆயிரத்து 645 பேருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டது என தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, 2,469 சீன நாட்டினருக்கு சீனோபாரம் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என்றும் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. (எ)

# மேய்ச்சல்தரை இன்மையால் பாற்பண்ணையாளர்கள் அவதி!

கிளிநொச்சி, ஏப். 11
கிளிநொச்சி மாவட்டத்திற் குட்பட்ட வட்டக்கச்சி கட்சன் வீதி கிராம மக்கள் மேய்ச்சல் தரை இன்மையால் அவதியுற்று வருவதாக தெரிவிக்கின்றனர்.

நீண்ட காலமாக தமக்கான மேய்ச்சல் தரை இல்லாமை யால் தமது கால்நடைகள் அழிவடைந்து வருவதாக அவர் கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே தமக்கான மேய்ச்சல் தரையை ஏற்பாடு செய்து தரு மாறு அரசிடம் கோரியுள்ளனர்.

# மேலும் 184 பேர் குணமடைவு

கொழும்பு, ஏப். 11
கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 91 ஆயி ரத்து 456 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த 24 மணிநேரத்தில் மேலும் 184 பேர் குணமடைந் துள்ள நிலையில் இந்த அதிக ரிப்பு ஏற்பட்டுள்ளதாக சுகா தார அமைச்சு தெரிவித்துள் ளது.

மேலும் இதுவரை தொற்று உறுதியான 94 ஆயிரத்து 7564 பேரில் 2 ஆயிரத்து 513 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை இலங்கையில் கொரோனா தொற்று உறுதி யானவர்களில் 595 பேர் இது வரை உயிரிழந்துள்ளமை குறிப் பிடத்தக்கது.

# மைத்திரி - விமல் இரகசிய சந்திப்பு





கொழும்பு, ஏப். 11
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினரு மான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக் கும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்சவுக்கும் இடையில் இரகசியமான சந்திப்பொன்று இடம் பெற்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக் கின்றன.

அரசாங்கத்துக்கும் அரசாங்க பங்காளி கட்சிகளுக்கும் இடையி லான கருத்து வேறுபாடுகள் அதிகரித்துள்ள நிலையிலேயே இவ் வாறு சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளதாக அறியமுடிகின்றது.

# தியவினி நீர்வீழ்ச்சியை பார்வையிட சென்றவர் பள்ளத்தில் வீழ்ந்து பலி!

கொழும்பு, ஏப். 11
பலாங்கொடை கல் தொட்ட பகுதியிலுள்ள திய வினி நீர்வீழ்ச்சியை பார்வை யிட சென்ற ஒருவர் பள்ளத்தில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

கேகாலை - ஹெட்டிமுல்ல பகுதியை சேர்ந்த 30 வயதான ஒருவரே இவ்வாறு மரணித்த தாக பொலிஸார் தெரிவித்தனர்.

தனது நண்பர்களுடன் நீர் வீழ்ச்சியை பார்வையிட சென்றி ருந்த நிலையில் அவர் தவறி வீழ்ந்து உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வரு கின்றனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லுக்கட்டும் மைதானமாக மாறும் நம் பாராளுமன்றம்

சேகு

ஒரு காலத்தில் சர்வதேச நாளிதழ்களில் இங்கையின் செயல் திறன் குறித்து பிரதான செய்திகள் வெளிவந்திருந்தது. அது **1940** ஆண்டு மற்றும் **1950** களில் லண்டன் டைம்ஸ் நாளிதழ் இலங்கை நாடாளுமன்றம் மற்றும் அரசியல் செயல் திறன் குறித்த பல செய்திகள் தலையாயங்களாக வெளிவந்தன.

சுதந்திரம் பெற்ற ஒரு வருடத்திற்குள் இலங்கையின் பொருளாதார ரீதியான சாதனை செய்ததை லண்டன் பத்திரிகைகள் பாராட்ட மறக்கவில்லை. அந்த நேரத்தில் வெளிநாட்டு ஊடகங்கள் நமது ஜனநாயகம், பாராளுமன்ற அமைப்பு மற்றும் அரசியல்வாதிகளின் முதிர்ச்சியடைந்த தன்மை ஆகியவற்றின் நம்பிக்கையையும் ஏற்றுக்கொள்ளலையும் கொண்டிருந்தது. அனால் அது இன்று இல்லாமல் போயிருக்கும் ஒரு நிலைமை உள்ளது. இன்று நம் நாட்டின் பாராளுமன்றம் தொடர்பில் வெளிநாட்டு செய்தித்தாள்களிலோ அல்லது உள்நாட்டு செய்த்து தாள்களிலோ நல்ல விதமாக ஒன்றும் வெளிவருவது இல்லை.

கடந்த 15ஆம் திகதி மற்றும் அதற்கு முதல் நாள் எங்களுடைய பாராளுமன்றம் மிகவும் சூடுபிடித்து இருந்தது. அங்கு பெரிய ஒரு குழப்பமான நிலைமை காணப்பட்டது. பலத்த வாய்மொழி தாக்குதல்கள் இடம்பெற்றது. அதற்காக பயன்படுத்தப்பட்ட சொற்கள் பாராளுமன்றத்திற்கு பொருத்தமற்றதாக இருந்தது. அங்கிருந்த மக்கள் பிரதிநிதிகள் ஒருவருக்கொருவர் கோபமாக நடந்துகொள்வதைக் பார்க்கமுடிந்தது. ஒரு குத்துச்சண்டை மேடையில் போட்டியாளர்கள் ஒருவருக்கொருவர் சிறப்பாக தாக்குதல் இடம்பெற்றது. இது போன்ற விளையாட்டு போட்டிகளில் யார் வெற்றி பெற்றாலும் மக்கள் அதனை பொருட்படுத்துவது இல்லை. ஏனென்றால் இது ஒரு வித்தியாசமான சண்டை.

இதன் போது வலுவான மற்றும் தந்திரோபாய போராளி அங்கு வெற்றி பெறுகிறார். நமது பாராளுமன்ற ஆசனத்தை எவர் வென்றாலும் அவர் ஒழுக்கமான முறையில் நல்ல பண்புள்ளவராக நடந்துக்கொள்ள வேண்டும் அதுதான் சிறப்பு.

இலங்கையின் நாடாளுமன்றத்தை திரும்பிப் பார்க்கும் போது மறக்க முடியாத பல சம்பவங்கள் உள்ளது. ஒன்று: இலங்கை நாடாளுமன்றம் ஆசியாவின் ஜனநாயகத்திற்கும் பாராளுமன்ற அமைப்பிற்கும் ஒரு முக்கியமான இடமாக இருந்தது.

இரண்டு: இலங்கை நாடாளுமன்றம் ஆசியாவில் முதிர்ச்சியடைந்த அரசியல்வாதிகள் கொண்ட ஒரு விவாதத்திற்கான மன்றமாக இருந்தது. மூன்று- இந்த நாட்டின் நாடாளுமன்றத்தில் உள்ளார்ந்த பல முக்கியமான மரபுகள் உள்ளன. அவை அனைத்தையும் கடந்தகால உறுப்பினர்கள் சிறப்பாக பாதுகாத்து வந்தனர்.

அவ்வாறு இருந்த எமது நாடாளுமன்றம் தகுதி இல்லாதவர்களின் வருகையால் சீர்குலைந்து. ஏன் இந்த நிலைமை என்று நாம் சிந்தித்தால் கட்சிகளின் கொள்கைகள், தேர்தல் முறைமைகள் மற்றும் சமுக அணுகுமுறை என்பனவைதான்.

கடந்த கால மக்கள் பிரதிநிதிகளாக சிறந்த பின்னணியைக் கொண்ட ஒழுக்கமானவர்கள் தெரிவுசெய்யப்பட்டார்கள். அவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்கள் தங்கள் பொறுப்புகள் மற்றும் கடமைகள் பற்றிய புரிதலுடன் செயல்பட்டுள்ளனர். அனால் எழுபதாம் ஆண்டு காலப்பகுத்திக்குப் பின்னர் இந்த நிலை மாறிவிட்டது. அதுவும் ஏதாவது ஒரு துறையில் பிரபலமாக விளங்குபவருக்கு நாடுளுமன்றம் செல்லும் வாய்ப்பு கிடைத்துள்ளது. இதற்கு காரணம் அரசியல் கட்சிகளினுடைய கொள்கைகள், மனித பலம், பணபலம் மற்றும் ஏனைய சில பலங்களை பயன்படுத்தி நாடளுமன்றம் நுழைபவர்களுக்கு அதில் உள்ள பொறுப்புகள் பற்றி தெளிவுகள் இல்லை.

கடந்த இரு தினங்களாக நாடாளுமன்றில் அமளி ஏற்பட முக்கிய காரணம் ரஞ்சன் ராமநாயக்காவின் உறுப்புரிமை. அவர் இப்போது குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட சிறை தண்டனை அனுபவித்து வருகின்றார். எனவே நாட்டின் சட்டத்தை ஒருபோது சபாநாயகரால் மாற்றி அமைக்க முடியாது. ஆனால் ரஞ்சன் ராமநாயக்கவை காப்பாற்றும் படி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கேட்பது போன்று உள்ளது. நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் முன்னால பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சனுக்கு நீதிமன்றம் கடூழிய வேலைகளுடன் சிறைத்தண்டனை வழங்கியுள்ளது. அது அவ்வாறு இருக்கும் பொது அவருடைய விடுமுறையை எவ்வாறு ஏற்பது என்ற சிக்கல் உள்ளது. அது ஒரு புறம் இருக்கு ஏற்கனவே சிறை தண்டனை அனுபவித்து வரும் இன்னும் ஒரு கொலைக்குற்றவாளிக்கு பாராளுமன்றம் வர சபாநாயகர் அனுமதி அளித்திருப்பது எவ்வாறு என்ற கேள்வி உள்ளது. சிவநேசதுரை சந்திரகாந்தன் சிறையில் இருக்கும் போது அவருக்கு பாராளுமன்றம் வர எவ்வாறு சபாநாயகர் அனுமதியளித்தார் என்ற கேள்விகளும்உள்ளது.

இவை அனைத்தையும் வைத்துக்கொண்டு தற்போது உள்ள சபாநாயகர் ஒரு பக்க சார்ந்து செயற்படுகின்றார் என்ற குற்றச்சாட்டுலும் முன்வைக்கப்படுகின்றது. சபாநாயகரை நடுநிலைமையாக செயற்படுமாறு கூறி அவருக்கு கடிதம் அனுப்பப்படுகின்றது. இவை அனைத்து நாடாளுமன்றம் குழப்பம் அடைய கடந்த நாட்களில் காரணமாக அமைந்தது.

அது மாத்திரம் அன்றி எதிர் தரப்பினருக்கு நேரம் வழங்குவது தொடர்பிலும் வாய்மூல கேள்விகளை கேட்கும் போது அதற்கு தடை ஏற்படுத்துவது தொடர்பிலும் பரவலாக எதிர்ப்புகள் வெளியிடப்படுகின்றது.

இது இந்த காலம்!

இலங்கை நாடாளுமன்றம் உலகம் முழுவது மீண்டும் பேசப்பட்ட ஒரு காலமாக நல்லாட்சி காலத்தை குறிப்பிடலாம். அப்போது இருந்த சபாநாயகர் கரு ஜயசூரிய ஜனநாயாகத்தை பாதுகாக்க பெரிதும் பாடுபட்டார். நாடாளுமன்ற உரிமைகளை பாதுகாக்க இக்கட்டான சூழ்நிலையிலும் போராடினார். முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன ஜனநாயகத்திற்கு விரோதமான முறையில் மகிந்த ராஜபக்சவை பிரதமராக நியமித்தார். அதன் பின்னர் நாடாளுமன்றில் பெரும்பாண்மை தொடர்பில் கேள்விகள் எழுந்தன. யாருக்கு ஆட்சி என்ற போட்டி வந்தது. அதை நிரூபிக்க பாரளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை தேவைப்பட்டது. அதனை உறுதி படுத்த இரண்டு தரப்புமே போராடியது.

அதிகாரத்திற்காக நாடாளுமன்றில் பாரிய சம்பவங்கள் இடம்பெற்றது. சரியாக **2018** நவம்பர் மாதம் **14 15 16** ஆகிய மூன்று திணைகள் பாரிய அளவில் அமளியும் கைகலப்பும் ஏற்பட்டது. சபாநாயகரின் இருக்கையில் தண்ணீர் ஊற்றப்பட்டது. ஒலிவாங்கிகள் உடைக்கப்பட்டது. கதிரைகள் தூக்கி எறியப்பட்டன. ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டனர். அது மாத்திரமா? மிளகாய் தூள் நீருடன் கரைத்து ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் மீது ஊற்றப்பட்டது. அப்போதைய சபாநாயகர் நாடாளுமன்ற உரிமைகளையும் சம்பிரதாயங்களையும் ஜனநாயகத்தையும் நிலைநாட்டவும் போராடி வெற்றி கண்டார். இன்று நிலைமை மாறியிருக்கின்றது. நடுநிலைமை தொடர்பில் கேள்விகள் எழுந்துள்ளன.

நாடாளுமன்றில் உள்ள ஒவ்வரு உறுப்பினரது பொறுப்பும் சபாநாயகரின் கையில் உள்ளது. ஆனால் அனைவரையும் ஒரேமாதிரியாக நடத்தவேண்டும். ஆளும் கட்சி எதிர்கட்சிகளுக்கான பேசும் சந்தர்ப்பங்கள் சரியாக வழங்கவேண்டும்.

அதேபோன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பது மிக முக்கியமானது. அவர்களின் செயல் தொடர்பில் வாக்களித்த மக்கள் மீண்டும் சிந்திக்க வேண்டிய நிலைமைக்கு தள்ளப்படுகின்றார்கள். அவர்கள் இருப்பதும் பேசுவதும் ஒரு அதிஉயர் சபை. ஆகவே அதற்கான அங்கீகாரத்தை அவர்கள் வழங்கவேண்டும்.

முறையில்லாத சொற்பிரயோகங்கள், முறையற்ற செயற்பாடுகளை செய்யும் போது அவர்கள் அவர்கள் தொடர்பில் சிந்திக்க வேண்டும். நாம் நடந்துகொள்ளும் விதம் சரிதானா என்ற குற்ற உணர்வு அவர்களுக்கு வருமாயின் செயற்பாடுகள் சிறப்பாக அமையும்.

ஒவ்வொரு முறையும் ஆட்சிக்கு ஆட்சி நாடாளுமன்ற அமர்வுகள் தொடர்பில் கேள்விகள் எழுப்பப்படுகின்றன. தண்டனை அனுபவிக்கும் ஒருவருக்காக நாடாளுமன்ற அமர்வுகளை குழப்படுவது நல்லது அல்ல. அதேபோன்று எதிர்தரப்பு உறுப்பினர்களின் குரல்களை நசுக்குவதும் சிறந்தது அல்ல.

மக்கள் தங்கள் சார்பாக தங்களுடைய பிரதிநிதிகளை அதிஉயர் சபைக்கு அனுப்புவது தங்களுடைய பிரச்சினை மற்றும் சிக்கல்களை தீர்த்து சிறந்த ஒரு நாட்டை கட்டியெழுப்புவதற்காக. ஆனால் அது அப்படி நடப்பதை தெரியவில்லை. ஒருவரை ஒருவர் காப்பாற்றவும் தங்களுக்கான வரப்பிரசாதங்களை பயன்படுத்திக்கொள்ளவதாகவும் தெரிகின்றது. இது மாற்றம் அடைய வேண்டும் அந்த சபைக்கான மரியாதை வழங்கப்படவேண்டும். அரசியல்வாதிகள் படித்தவர்களாக நடப்பது சிறந்தது. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மியான்மரில் இராணுவம் எல்லையில் அகதிகள் இக்கட்டில் இந்தியா



- மு.இராமனாதன்

மியான்மர், பிப்ரவரி 1 அதிகாலை. தேர்தலில் வெற்றிபெற்ற ஆளும் தேசிய ஜனநாயகக் கட்சி (என்.எல்.டி) பதவியேற்கச் சில மணி நேரங்களே இருந்தன. அப்போது ராணுவம் ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டது. என்.எல்.டியின் தலைவர் ஆங் சான் சூச்சியும் கட்சியின் முன்னணியினரும் சிறை வைக்கப்பட்டார்கள். கடந்த இரண்டு மாதங்களுக்கும் மேலாக மக்கள் தெருவில் இறங்கிப் போராடிவருகிறார்கள். ராணுவத்தின் கரங்கள் சொந்த நாட்டு மக்களின் குருதியில் நனைந்திருக்கின்றன.

பல ஆண்டுகளாகவே மியான்மர் ராணுவத்தோடு இந்தியா அனுசரணையாக இருந்துவருகிறது. பிப்ரவரி மாதம்கூடத் தனது கவலையைப் பதிவுசெய்ததோடு நிறுத்திக்கொண்டது. ஆனால், மனிதநேய ஆர்வலர்கள் இந்தியாவிடம் இன்னும் அதிகம் எதிர்பார்க்கின்றனர்.

### மக்கள் போராட்டம்

ராணுவத்துக்கு எதிரான மக்களின் போராட்டங்கள் நீர்த்துப்போகுமென்று தளபதிகள் கருதினார்கள். அதற்குப் பல காரணங்கள். 1962-ல் ராணுவம் முதல் முறையாக ஆட்சியைக் கைப்பற்றியது. ஆட்சிக்கு எதிரான பெரிய போராட்டம் 1988-ல் தான் நடந்தது. அப்போது உயர்ந்துவந்த நட்சத்திரம்தான் சூச்சி. போராட்டம் ஒடுக்கப்பட்டது. சூச்சி சிறை வைக்கப்பட்டார். அடுத்து 2007-ல் புத்த பிக்குகள் ராணுவத்துக்கு எதிராகத் திரண்டனர். அந்த எழுச்சியும் ஒடுக்கப்பட்டது.

2011-ல் ஜனநாயகக் கீற்றுகள் தோன்றலாயின. 2012-ல் என்.எல்.டி எதிர்க்கட்சி ஆகியது் 2015-ல் ஆளுங்கட்சியாக உயர்ந்தது. எனினும் ராணுவம் ஆட்சியிலும் பங்கு வகித்தது. சூச்சி ராணுவத்துக்கு வெகு இணக்கமாக நடந்துகொண்டார். இதனால், உலக நாடுகளின் நன்மதிப்பை இழந்தார். ஆனால், பெரும்பான்மை பாமா இனத்தவர் அவரைக் கொண்டாடவே செய்தனர். 2020-ல் நடந்த தேர்தலில் என்.எல்.டி இரண்டாவது முறையாக அமோக வெற்றிபெற்றது.

சூச்சிக்கு வெகுமக்கள் அளித்துவரும் ஆதரவு ராணுவத்தை அச்சுறுத்தியது. சூச்சி சர்வதேச ஆதரவை இழந்துவிட்டார் என்று ராணுவம் கணக்கிட்டது. மேலும், ராணுவ நுகத்தடிக்கு மியான்மர் மக்கள் பழக்கமானவர்கள்தானே என்றும் அது கருதியது. ராணுவ ஆட்சியைக் கொண்டுவந்தது. ஆனால், அதன் கணக்கு பிசகிவிட்டது. கடந்த பத்தாண்டுகளாக வீசும் அரசியல் - பொருளாதாரச் சுதந்திரக் காற்றை, அது எவ்வளவு குறைவாக இருந்தாலும், இழப்பதற்கு மக்கள் சித்தமாக இல்லை.

அவர்கள் போராடிவருகிறார்கள். இதுவரை 550-க்கும் மேற்பட்ட குடிமக்கள் தெருக்களில் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கானோர் சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள். மேற்குலக நாடுகள், சூச்சியின் மீது விமர்சனங்கள் இருந்தபோதும், ஒரு ஜனநாயகப் படுகொலையை அங்கீகரிக்கத் தயாராக இல்லை. அவை மியான்மரின் மீது பொருளாதரத் தடைகளை விதிக்கின்றன.

### அண்டை நாடுகளின் ஆதரவு

இந்தத் தடைகளை மியான்மர் பொருட்படுத்தவில்லை. ஏனெனில், அதற்கு அண்டை நாடுகளின் ஆதரவு இருக்கிறது. மார்ச் 27 அன்று தளபதிகள் வருடாந்திர ராணுவ தின அணிவகுப்பை நடத்தினார்கள். இதில் இந்தியப் பிரதிநிதி கலந்து கொண்டார். வேறு சில நாடுகளும் பங்கேற்றன. அவை: பாகிஸ்தான், வியட்நாம், ரஷ்யா, சீனா, வங்கதேசம், லாவோஸ், தாய்லாந்து. இவற்றுள் கடைசி நான்கு நாடுகளும் இந்தியாவும், மியான்மரின் எல்லையைப் பகிர்ந்துகொள்பவை.

அணிவகுப்பு நடந்த அதே நாளில் மியான்மரின் பல்வேறு இடங்களில் ஏழு குழந்தைகள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட நிராயுதபாணிகள் கொல்லப்பட்டனர். உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியா, இந்த அணிவகுப்பில் கலந்துகொண்டதைப் பல நாடுகள் விமர்சித்தன. இந்தியா, உள்நாட்டிலும் விமர்சனங்களை எதிர்கொள்ள வேண்டிவந்தது.

### எல்லையில் அகதிகள்

மியான்மரில் மூன்றில் ஒருவர் சிறுபான்மையினர். ஷான், கரீன், ரக்கைன், சின், கச்சின், ரோஹிங்கியா முதலான இனத்தவர்கள். இவர்கள் மிகுதியும் மியான்மரின் எல்லைப்புற மாநிலங்களில் வசிக்கிறார்கள். இவர்களில் ரோஹிங்கியா இனத்தவர் 13 லட்சம் பேர் வங்கதேசத்தில் அகதிகளாக வாழ்கிறார்கள். இப்போதைய ராணுவ ஆட்சிக்குப் பிறகு மியான்மரின் எல்லைப்புற மாநிலங்களின் சிறுபான்மையினர் தாய்லாந்துக்கும் இந்தியாவுக்கும் அடைக்கலம் தேடி அகதிகளாக வருகின்றனர்.

இந்திய-மியான்மர் எல்லையோரம் அமைந்திருப்பவை மிசோரம், மணிப்பூர், நாகாலாந்து, அருணாச்சலப் பிரதேசம் ஆகிய வடகிழக்கு மாநிலங்கள். மியான்மரிலிருந்து வரும் அகதிகளை நல்ல வார்த்தை சொல்லித் திருப்பி அனுப்பி வைத்துவிடுமாறு ஒன்றிய அரசு இந்த அண்டை மாநிலங்களைக் கேட்டுக்கொண்டது. இதை ஏற்பதில் மிசோரம் அரசுக்குத் தயக்கம் இருந்தது.

மியான்மரிலிருந்து அகதிகளாக வரும் சின் இனத்தவர்களும் மிசோரம் மக்களும் திபெத்-பர்மீய வம்சாவளியினர். 1938-ல் பர்மா தனி நாடாகும் வரை ஒரே பிரிட்டிஷ்-இந்தியக் குடையின் கீழ் வசித்தவர்கள். இப்போதும் மண உறவுகளாலும் வணிக உறவுகளாலும் பிணைக்கப்பட்டவர்கள்.

ஆகவே, அவர்களுக்குப் புகலிடம் வழங்க அனுமதிக்க வேண்டும் என்று மிசோரம் வலியுறுத்தியது. இதுவரை மிசோரமுக்கு 1,000 அகதிகள் வந்திருப்பார்கள். மணிப்பூர் அரசு மார்ச் 26 அன்று அகதிகளை அனுமதிக்க மாட்டோம் என்று அறிக்கை வெளியிட்டது. பொதுமக்களின் எதிர்ப்பைத் தொடர்ந்து மார்ச் 29 அன்று அதைப் பின்வாங்கிக் கொண்டது.

### இந்தியாவின் கவலைகள்

1988-ல் மாணவர் போராட்டம் நடந்தபோது இந்தியா ஜனநாயக சக்திகளுக்குத்தான் ஆதரவாக இருந்தது. எனில், 1991-ல் நரசிம்ம ராவ் அரசு மியான்மரின் ராணுவத் தலைமையோடு நட்பு பாராட்டியது. இரண்டு காரணங்கள். அப்போது இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் இயங்கிய பயங்கரவாதக் குழுக்கள் மியான்மரில் மறைந்துகொள்வதைத் தடுக்க அந்நாட்டு ராணுவ அரசின் ஒத்துழைப்பு அவசியமாக இருந்தது.

அடுத்து, மியான்மரில் சீனா பெற்றுவந்த அபரிமிதமான செல்வாக்கை மட்டுப்படுத்துவது. மியான்மரில் சீனச் செல்வாக்கு இப்போது அதிகமாகியிருக்கிறது. ஆனால், இந்தியாவின் வடகிழக்கில் பயங்கரவாத அச்சுறுத்தல் இல்லை. ஆகவே, அகதிகளுக்குப் புகலிடம் வழங்க வேண்டுமென்பது எல்லைப்புற மாநிலங்களின் நிலைப்பாடாக இருக்கிறது.

இந்தச் சூழலில், மார்ச் 31-ல் கூடிய ஐநா அரங்கில் மியான்மர் ராணுவ அரசை இந்தியா கண்டித்தது் உயிரிழந்த பொதுமக்களுக்கு இரங்கல் தெரிவித்தது் தலைவர்களை விடுவிக்கக் கோரியது் மியான்மர் ஜனநாயகப் பாதைக்குத் திரும்ப வேண்டும் என்றும் கோரியது.

மியான்மர் அரசுடன் நல்லுறவைப் பேணிக்கொண்டே, இந்தியா அகதிகளுக்குப் புகலிடம் வழங்க வேண்டும். அடுத்த வீட்டில் ஜனநாயகம் கழுத்து நெரிக்கப்படும்போது, அதைக் கண்மூடிக் கடந்துபோவது எவ்வகையில் நியாயம்? ராஜீய வழிகளில் உள்ள எல்லாச் சாத்தியங்களையும் இந்தியா முயற்சிக்க வேண்டும். அது சர்வதேச அரங்கில் இந்தியாவின் மதிப்பையும் கூட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி** 37

## 2013 - 13,14,15

- **கவிதையை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

பார்த்ததும் நல்ல ஆசையை உண்டாக்கும்
கண்களைச் சிமிட்டும் தலையை ஆட்டும்
அம்மா சந்தையிலிருந்து கொண்டுவந்த
அழகு மிக்க பொம்மை

13. பொம்மையைக் கொண்டு வந்து தந்தவர் யார்? எங்கேயிருந்து?
(1) அம்மா, சந்தையிலிருந்து (2) அம்மா, கடையிலிருந்து
(3) அப்பா, சந்தையிலிருந்து.

14. பொம்மையின் இரு இயல்புகள்
(1) கண்களைச் சிமிட்டுதல், கைகளை ஆட்டுதல்
(2) தலையை ஆட்டுதல், கண்களைச் சிமிட்டுதல்
(3) ஆடுதல், தலையை ஆட்டுதல்

15. இக்கவிதையில் முக்கியமாக எதனைப் பற்றிக் கூறப்படுகின்றது?
(1) பொம்மையின் பெறுமானம் பற்றி
(2) பொம்மை கிடைத்த விதம் பற்றி
(3) பொம்மையின் அழகு பற்றி

## 2018 - 09,10,27

- பின்வரும் கவிதையை வாசித்து 09, 10 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

மனதில் உறுதி வேண்டும்
உடலில் வலிமை வேண்டும்
சோம்பலை விலக்கிட வேண்டும்
நாட்டுக்கு உழைக்க வேண்டும்

09. இக்கவிதை தரும் முழுமையான செய்தி யாது?
(1) சோம்பலை அகற்றிடுக. (2) கடுமையாக வேலை செய்திடுக.
(3) நாட்டுக்குப் பெறுமதியுடையவனாகுக.

10. இக்கவிதையின்படி நாட்டுக்காக உழைக்கும் ஒருவரிடம் இருக்கத்தக்க இரு இயல்புகளாவன
(1) மனதில் உறுதியும் வேலையில் சோம்பலின்மையும்
(2) மனதை முன்னேற்றுதலும் உடலை வளர்த்தலும்
(3) மனதை உறுதிப்படுத்தலும் உடலை வளர்த்தலும்

27. ஒரு கவிதையின் நான்கு வரிகள் மாற்றி எழுதப்பட்ட விதம் கீழே தரப்பட்டுள்ளது.
A - கடைப்பிடித்து நடந்திடின்
B - சத்தியந் தான் வென்றிடும்
C - காந்தி சொன்ன வழிகளைக்
D - சாந்தி எங்கும் நிலவிடும் கருத்துள்ள கவிதை கிடைக்குமாறு பொருத்தமாக்கும் போது அவ்வரிகளின் சரியான ஒழுங்குமுறை
(1) B, D, A, C (2) C, A, D, B (3) D, C, B, A

## 2019 - 09,10

- பின்வரும் கவிதையை வாசித்து 09,10 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

சுத்த முள்ள இடமெங்கும்
சுகமும் உண்டு நீ அதனை
நித்தம் நித்தம் பேணுவையேல்
நீண்ட ஆயுள் பெறுவாயே.

09. இக்கவிதை தரும் முக்கியமான செய்தி யாது?
(1) சுத்தம் பேணுதல் வேண்டும். (2) எங்கும் சுத்தம் உண்டு .
(3) ஆயுளைப் பேணுதல் வேண்டும்.

10. கவிதையில் உள்ள கருத்துகள் சரியான ஒழுங்கு முறையில் காட்டப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.
(1) சுத்தத்தைப் பேணுதல் வேண்டும் ⟶ சுத்தம் பேணுவதால் ஆயுளும் அதிகரிக்கும் ⟶ சுத்தம் இருந்தால் ⟶ சுகம் இருக்கும்.
(2) சுத்தம் பேணுவதால் ஆயுளும் அதிகரிக்கும் சுத்தம் இருந்தால் சுகம் இருக்கும் சுத்தத்தைப் பேணுதல் வேண்டும்.
(3) சுத்தம் இருந்தால் சுகம் இருக்கும் ⟶ சுத்தத்தைப் பேணுதல் வேண்டும் ⟶ சுத்தம் பேணுவதால் ஆயுளும் அதிகரிக்கும்.

**இதற்கான விடைகள் நாளை வெளிவரும்**

ஆசிரியர் அன்னமையா - 076 056 5786

# அரசாங்கம் குறைபாடுகளை திருத்திக்கொள்வது அவசியம்

## திஸ்ஸ விதாரண சொல்கிறார்

கொழும்பு,ஏப்.11

**சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான ஆளுங் கூட்டணியைப் பலவீனப்படுத்துவது எமது நோக்கல்ல.**

**ஆளும் கட்சிக்கும், பங்காளிக் கட்சிக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. முரண்பாடுகளுக்குத் தீர்வு காண்பதற்காகவே பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளோம். அரசாங்கத்தின் செயல்பாடுகளில் உள்ள குறைபாடுகளைத் திருத்திக்கொள்வது அவசியமாகும் என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.**

*சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் இடம்பெற்ற பங்காளிக் கட்சித் தலைவர் கூட்டத்தில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பு தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.*

*அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில்:*

*பொதுஜன பெரமுன தலைமையில் கூட்டணி அமைத்துள்ள பங்காளிக் கட்சிகள் இடம்பெற்று முடிந்த பொதுத் தேர்தலிலும், ஜனாதிபதித் தேர்தலிலும் அர்ப்பணிப்புடன் செயல்பட்டுள்ளன. இருப்பினும், பொதுஜன பெரமுனவின் ஒரு சில உறுப்பினர்களின் கருத்துக்களும், செயல்பாடுகளும் பங்காளிக் கட்சிகளைப் புறக்கணிப்பதாக அமைந்துள்ளன.*

*அரசாங்கத்தைப் பலவீனப்படுத்துவது பங்காளிக் கட்சிகளின் நோக்கமல்ல, ஒரு சில வெறுக்கத்தக்க பேச்சுக்கள் கூட்டணியைப் பலவீனப்படுத்துவதாகக் காணப்படுகின்றது. இவ்விடயம் குறித்து கூட்டணியின் சிரேஷ்ட தலைவர்களுக்க பலமுறை குறிப்பிட்டும் எவ்வித சாதகமான தீர்மானமும் கிடைக்கப் பெறவில்லை.*

*சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமையகத்தில் 12 அரசியல் கட்சித் தலைவர்களை உள்ளடக்கிய பேச்சுவார்த்தையின் போது மாகாண சபைத் தேர்தல் முறைமை குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டது. எல்லை நிர்ணய பிரச்னைக்குத் தீர்வு காணாமல் மாகாண சபைத் தேர்தலை பழைய தேர்தல் முறைமையில் நடத்த இடமளிக்க முடியாது.*

*சுபீட்சமான எதிர்காலக் கொள்கைத் திட்டத்தை முழுமையாக செயல்படுத்த*




*வேண்டுமாயின் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். ஆளும் தரப்பின் ஒரு சிலரது வெறுக்கத்தக்க பேச்சுக்கள் கூட்டணியைப் பலவீனப் படுத்துகின்றது. முரண்பாடுகளை ஏற்படுத்தி கூட்டணியைப் பலவீனப்படுத்தி 2014 ஆம் ஆண்டு காணப்பட்ட அரசியல் சூழலை ஏற்படுத்துவது ஆளும் தரப்பின் ஒரு சிலரது நோக்கமாகக் காணப்படுகின்றது.*

*அரசாங்கத்தின் செயல்பாடுகளில் ஒரு சில குறைபாடுகள் காணப்படுகின்றன. குறைபாடுகளை திருத்திக்கொண்டு ஒன்றிணைந்து செயல்படுவது அவசியமாகும். கடந்த காலங்களில் இடம்பெற்ற ஒரு சில செயல்பாடுகள் அரசாங்கத்துக்குப் பெருமளவில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. ஜெனிவா விவகாரத்தை அரசாங்கம் கையாண்ட விதம் முற்றிலும் தவறு என்பது பேச்சுவார்த்தையின் போது சுட்டிக்காட்டப்பட்டது- என்றார். (எ)*

# 80 இலட்சம் ரூபாய் பெறுமதியான போதைப்பொருளுடன் ஒருவர் கைது

*கொழும்பு,ஏப்.11*

*80 இலட்சம் ரூபாய் பெறுமதியான போதைப்பொருளுடன் ஒருவர் கொழும்பு மத்திய குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.*

*கொழும்பு, மாளிகாவத்தை பகுதியில் வைத்தே இந்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.*

*கைதுசெய்யப்பட்டவரிடமிருந்து 80 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஒரு கிலோ 200 கிலோ ஐஸ் ரக போதைப் பொருளை கொழும்பு மத்திய குற்றத் தடுப்புப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.*

*62 வயது நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)*

# குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளராக ரொஹான் பிரேமரத்ன

*கொழும்பு,ஏப்.11*

*சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொஹான்பிரேமரத்ன குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என பொலிஸ் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.*

*உடன் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.*

*குறித்த பிரிவின் பணிப்பாளராக இருந்த நிஷாந்த சொய்ஸா, கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் பணிப்பாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ள நிலையிலேயே அந்த வெற்றிடத்துக்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொஹான் பிரேமரத்ன நியமிக்கப்பட்டுள்ளார். (எ)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருந்ததி
## இணைய திருமண சேவை

+94 777 164 524
www.arunthathee.com

## மணமகன் விபரம்

**16643|வே|1983**
கரவெட்டி | இந்து
Sri Lanka | 165 செ.மீ
Electric Officer
விசாகம் (துலாம்) | செவ்: 7
Beautiful Girl

**15823|வே|1985**
சில்லாலை | இந்து
Sri Lanka | 174செ.மீ
Quantity Surveyor
சித்திரை(துலாம்) |
Only Jaffna | கி .பா : 64

**16616|வே|1986**
கல்வியங்காடு | Doctor
167செ.மீ | Sri Lanka
அனுஷம்(விருச்சிகம்)
செவ் : 01 | Trincomalee
கி.பா 43

**15766|வே|1987**
நல்லூர் | இந்து
163செ.மீ | Sri Lanka
சூ+செவ் :06 | Engineer
பூராடம் (தனுசு) | கி.பா 25
Degree Holder only

**15967 |வே| 1988**
நெல்லியடி | இந்து
175செ.மீ | UK | Engineer
மிருகசீரிடம் (ரிஷபம்)
கி.பா 14
Degree Holder only

**16048|வே|1988**
பளை வீமன்காமம் | இந்து
160 செ.மீ | Sri lanka
Quantity Surveyor
சுவாதி (துலாம்) | கி.பா 30
Colombo base jaffna girl

**16120| வே|1988**
கரவெட்டி | இந்து
Software Engineer
|185 செ.மீ | Sr lanka
அத்தம் (கன்னி | செவ் :07
Degree Holder | கி.பா: 84

**17369|வே|1988**
காரைநகரம் | இந்து
UK |172 செ.மீ | Engineer
ரேவதி (மீனம்)
செவ் : 12 | Degree Hold

**16433|வே|1988**
வண்ணார்பண்ணை | இந்து
Sri Lanka | 168செ.மீ
Demonstrator | கி.பா: 15
திருவோணம் (மகரம்)
Vegetarian | Colombo-06

**16162|வே |1989**
வரணி | இந்து
Sri Lanka | 163செ.மீ
Graduate Teacher/Gov
சுவாதி (துலாம்)
Degree Holder/Gov+job

**16400|வி|1989**
Colombo-06 | இந்து
Singapore | 161 செ.மீ
Software Engineer
பூரம்(சிம்மம்) | சூ.செவ் : 04
Degree Holder | கி.பா:57

**16550|வே|1989**
மல்லாகம் | இந்து சூ.செ : 2
Network Engineer
Sri lanka | 170 செ.மீ
அனுஷம் (விருச்சிகம்)
Degree holder only

**16679|வி|1989**
மாவிட்டபுரம் | SriLanka
Assistant Manager
சூ+செவ் : 06 |178 செ.மீ
உத்தராடம் (மகரம்) | சைவம்

**16430|வே|1989**
சங்கானை | இந்து
Canada | Chemical
Engineer | மகம் (சிம்மம்)
செவ் : 08 | 165 செ.மீ
Degree Holder | Colombo

**15742|வே|1990**
முல்லைத்தீவு | கிறிஸ்தவம்
Sri lanka | Engineer
பூசம் (கடகம்) |172 செ.மீ
Degree Holder only

**16132|வே |1990**
இணுவில் | இந்து | செவ் :08
AU | Quantity Surveyor
அனுஷம்(விருச்சிகம்) | கி.பா : 22
168செ.மீ | Colombo -06
Engineer/Accountant

**16024|வே|1990**
உரும்பிராய் | இந்து
Sri Lanka | Civil Engineer
175செ.மீ | கி.பா: 24
Engineer or Doctor

**16105|வே|1990**
கரவெட்டி | இந்து | கி.பா:38
179செ.மீ | Business
Analyst | புனர்பூசம் (மிதுனம்)
Educated Girl-25

**15844|வே|1991**
குப்பிளான் | இந்து
Doctor | Sri lanka
அத்தம்(கன்னி) | கி.பா : 22
176 செ.மீ | செவ் : 01
Teacher or any job

**16916|வே|1991**
திருநெல்வேலி | கி.பா : 8
Software Engineer
Sri Lanka | பூசம் (கடகம்)
185 செ.மீ | செவ் : 12
Degree Holder/Working Girl

**16553| வே |1991**
நாவாலி | இந்து | செவ் : 04
Sri Lanka | 170செ.மீ
Executive Manager
சித்திரம் (துலாம்) | Kandy
Educated Girl

**16739|வே|1991**
தாமரபுரம் | இந்து
Qatar | 178 செ.மீ
Accountant | சூ .செவ் :02
அனுஷம் (விருச்சிகம்)
A/L or above Studied

**17063|வே|1991**
வடலியடைப்பு | இந்து
Accountant | SriLanka
170 செ.மீ | சூ .செவ் : 08
பூரட்டாதி (கும்பம்) | கி.பா: 28
Educated & Beautiful

**16370 |வே| 1992**
காரைநகர் | இந்து
SriLanka | Lecturer
178செ. மீ | செவ் : 02
ரேவதி (மீனம்)
Foreign/ Colombo-06

## மணமகள் விபரம்

**16601|வே|1985**
இணுவில் | இந்து
Dentist | Sri lanka
திருவோணம்(மகரம்)
153செ.மீ | சூ செவ் : 08
Degree Holder | Col -06

**15820|வே|1985**
யாழ்நகரம் | இந்து | செவ்:08
Sri lanka |158 செ.மீ
Account Executive
விசாகம்(துலாம்) Dehiwala
Educated Foreign & Col

**16697|கோ |1987**
நெல்லியடி | இந்து
155செ.மீ | பரணி (மேடம்)
Dept Officer | கி.பா: 58
சூ.செவ்:01 | Sri Lanka
Government Job

**16379|ந|1988**
சாவகச்சேரி | இந்து
146 செ.மீ | மகம் (சிம்மம்)
Dept Officer
Working Boy

**16285|வே|1989**
காரைநகர் | இந்து | செவ்:02
கி.பா: 17 | Doctor
சுவாதி (துலாம்) | Colombo
Sri Lanka | 161செ.மீ
Doctor or Engineer boy

**16240|வே|1989**
வவுனியா | இந்து
Teacher | கி.பா :26
ரோகிணி (ரிஷபம்)
162செ.மீ | சூ.செ : 07
Government or Private

**16129|வே|1989**
இணுவில் | இந்து | செவ்: 12
Sri Lanka | Colombo 06
Accountant | கி .பா 18
புனர்பூசம் (மிதுனம்)
164 செ.மீ
Australia PR Boy

**16580| வே |1989**
காரைநகரம் | இந்து
Teacher | Sri Lanka
மகம் (சிம்மம்) |169செ.மீ
Teacher only

**16201|வே|1990**
கைதடி | இந்து | கி .பா: 69
Software Engineer
திருவோணம் (மகரம்)
Sri Lanka |168 செ.மீ
Degree Holder

**16874|கு| 1990**
இருபாலை | இந்து
Sri Lanka | Teacher
பரணி(மேடம்) செவ்: 04
157செ.மீ
Good Job

**15775|வ|1990**
திருகோணமலை | இந்து
Lawyer | 152 செ.ம
கேட்டை (விருச்சிகம்)
Sri Lanka | Doctor
Engineer or lawyer

**15751|வே |1990**
சண்டிலிப்பாய் | இந்து | SL
Teacher | 164செ.மீ
சதயம் (கும்பம்) | கி.பா:17
செவ்:08 | Kilinochchi
Government Job

**16195| வே|1990**
திருநெல்வேலி | இந்து
Sri Lanka | Lecturer
ரேவதி (மீனம்)
152செ.மீ | Nuwaraeliya
Educated

**15745|வே|1990**
கந்தரமடம் | இந்து
Singapore | Engineer
அஸ்வினி (மேடம்)
155செ.மீ
Only Singapore

**16069| வே|1991**
சரவணை | இந்து | செவ்:08
Engineer | Singapore
மிருகசீரிடம் (ரிஷபம்)
170 செ.மீ | Killinochchi
Degree Holder

**16760|வே|1991**
யாழ்.நகரம் | இந்து
Sri Lanka | Executive in
Bank |164செ.மீ | செவ் :
02 | அத்தம் (கன்னி)
Good Job

**16207|வே|1991**
மட்டக்களப்பு | Srilanka
168 செ.மீ | Doctor
விசாகம் (விருச்சிகம்)
Colombo -06
Doctor only

**15772|கோ|1991**
சுன்னாக நகரம் | இந்து
Sri Lanka | Trincomalee
Asistant Engineer
162 செ.மீ | ரேவதி(மீனம்)
Good Job | கி.பா :10

**16463|கோ|1992**
உடுவில் | இந்து
Sri Lanka | Doctor
உத்தரம் (கன்னி)
162 செ.மீ
Doctor/Engineer only

**15988| வே|1992**
இளவாலை | இந்து
Sri Lanka | Doctor
மூலம் (தனுசு) |160செ.மீ
Doctor / Engineer

**17258|வே|1993**
மானிப்பாய் | இந்து
Sri Lanka | Architecture
167செ.மீ | பூராடம் (தனுசு)
Colo-06 | Good Character
Foreign | கி.பா:33

**16883|வே|1993**
தெல்லிப்பளை | இந்து
Sri lanka | Executive
165 செ.மீ | சூ.செவ் : 07
உத்திரட்டாதி (மீனம்)
Foreign Girl

**16126|வே|1993**
யாழ்.நகரம் | Sri Lanka
162செ.மீ | Accountant
சூ .செவ்:06
ரேவதி (மீனம்)
Degree Holder | Aus(PR)

**16958|வே|1993**
மாவிட்டபுரம் | இந்து
SriLanka | 156செ.மீ
Research Assistant &
Nutritionist
மூலம் (தனுசு) | செ.வ் :04
Professional

உங்களுக்கு பொருத்தமான வரனின் பதிவு (Profile No) இலக்கத்தை Whatsapp 94777164524 இற்கு அனுப்பி குறித்த வரனின் முழுமையான விபரத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20, கே.கே.எஸ் வீதி, கொக்குவில்

**வரன் தேடுவோம் வாருங்கள்** திருமண தேடலை இலகுவாக்கும் முயற்சி

25.04.2021 Marine Grand வெள்ளவத்தை

ஆயிரக்கனக்கான உள்நாட்டு, வெளிநாட்டு, அரச, தனியார், தொழல் புரியும் மணமக்களிலிருந்து உங்களுக்கு பொருத்தமா-வர்களை தேர்ந்தெடுக்க வாருங்கள் 25.04.2021 Marine Grand வெள்ளவத்தை காலை 9.00 - 12.00 மணிவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளவரசர் எடின்பரோ கோமகன் அரச வாழ்க்கையும் சவால்களும்

ஒரு நினைவு குறிப்பு

இளவரசர் பிலிப், எடின்பரோ கோமகன், அரசி மீதான நிலையான மற்றும் உறுதியான ஆதரவால் அனைவரது விரிவான மரியாதையை வென்றார். கடற்படை தளபதியாகவும், வெவ்வேறு விவகாரங்களில் விரிவான கடுமையான கருத்துகளையும் கொண்டிருந்த அந்த ஒருவரைத் தவிர, எவருக்கும் அது ஓர் கடினமான பாத்திரமாக இருந்திருக்கும்.

இருப்பினும், அந்த வலுவான குணாதிசயம்தான், அவரது பொறுப்புகளை மிகவும் திறம்பட ஆற்றவும், அரசிக்குரிய பணியை அவரது மனைவி ஆற்றுவதற்கு முழுமனதான ஆதரவை வழங்கவும் அவருக்கு வழிவகுத்தது.

இறையாண்மை மிக்க பெண்ணின் ஆண் துணைவராய், இளவரசர் பிலிப்புக்கு எவ்வித அரசியலமைப்பு பதவியும் கிடையாது. ஆனால், அரசியை நெருங்க வேறு எவரோ அல்லது, அரசிக்கு மிகப்பெரிய முக்கியத்துவத்தையும் அவர் இருந்ததைப் போல வேறு எவராலும் பெற முடியாது.

இளவரசர் பிலிப் 10 ஜூன், 1921இல் கொர்ஃபு தீவில் பிறந்தார். க்ரெகோரியன் பஞ்சாங்கத்தை கிரீஸ் ஏற்றுக் கொள்ளாததால், அவரது பிறந்த நாள் சான்றிதழில் 28 மே 1921 என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அவரது தந்தை க்ரீஸ் இளவரசர் ஆன்ட்ரூ, ஹெலன்ஸ் மன்னர் முதலாம் ஜோர்ஜின் இளைய மகன். தாய் பட்டென்பெர்க் இளவரசி அலைஸ், பட்டன் பெர்க் இளவரசர் லூயியின் மூத்த மகள் மற்றும் மவுன்ட்பேட்டன் பிரபுவின் சகோதரி.

1922இல் கலகம் ஏற்பட்ட பிறகு புரட்சிகர நீதிமன்றத்தால் அவரது தந்தை க்ரீஸில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

அவரது உறவினர் மன்னர் ஐந்தாம் ஜோர்ஜ் அனுப்பி வைத்த பிரிட்டிஷ் போர் கப்பலில் இவர்களின் குடும்பம் பிரான்ஸுக்கு கொண்டு செல்லப்பட்டது. அந்தப் பயணத்தின் பெரும்பகுதியை குழந்தையாக இருந்த பிலிப், ஆரஞ்சுப் பெட்டியால் செய்யப்பட்ட சிறிய தொட்டிலிலேயே கழித்தார்.

சகோதரிகள் நிறைந்த குடும்பத்தில் கடைக்குட்டியாக பிறந்த ஒரே சிறுவன், தனது குழந்தைப்பருவத்தை பாசம் மிகுந்த சூழ்நிலையில் கழித்தார்.

பிரான்ஸில் தமது கல்வியை இளவரசர் தொடங்கினார். ஆனால், ஏழு வயது இருக்கும்போது இங்கிலாந்தில் உள்ள மவுண்ட்பேட்டன் உறவினர்களுடன் தங்குவதற்காக வந்தார். அங்கு சர்ரீயில் ஆரம்பப் பள்ளியில் படித்தார்.



இந்த நேரத்தில் அவரது தாய்க்கு மனச்சிதைவு நோய் இருப்பது தெரிய வந்ததால், அவர் தனிமைப்படுத்தப்பட்டார். இளம் இளவரசருக்கு அவரிடம் சிறிதளவே தொடர்பு இருந்திருக்கும்.

1933இல் தெற்கு ஜெர்மனியில் கல்விப் பெருந்தகை குர்ட் ஹான் நடத்தி வந்த ஷூல் ஸ்க்லாஸ் சலேமிற்குசென்றார். ஆனால், வெகுசில மாதங்களிலேயே, யூதரான ஹானிற்கு, நாஜிக்களின் துன்புறுத்தலில் இருந்து தப்பிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

ஸ்காட்லாந்தில் குடியேறிய ஹான், கார்டன்ஸ்டொன் பள்ளியை நிறுவியதையடுத்து, ஜெர்மனியில் வெறும் இரண்டு மாதங்கள் வசித்த நிலையில், இளவரசர் அந்தப் பள்ளிக்கு மாறினார்.

பெற்றோரைப் பிரிந்த பதின்ம வயது சிறுவனுக்கு, கார்டன்ஸ்டொனில் சுய நம்பிக்கையை வலியுறுத்திய கிரேக்க ஆளுமை நிறைந்த சூழ்நிலை, அவர் தனியாக வசிப்பதற்கான ஏற்புடைய சூழ்நிலையை வழங்கியது.

போர் தோன்றிய நிலையில், ராணுவ பணிக்கு செல்ல இளவரசர் பிலிப் முடிவு செய்தார். றோயல் விமானப்படையில் சேர அவர் விரும்பினார். ஆனால், அவரது தாயாரின் குடும்பம், கடல் மாலுமிகள் பாரம்பரியத்தை கொண்டிருந்ததால், அவர் டார்மெவுத்தில் உள்ள பிரித்தானிய றோயல் கடற்படை கல்லூரியில் பயிற்சி மாணவராக சேர்ந்தார்.

அங்கு பணியில் இருந்தபோது, கல்லூரியை சுற்றிப்பார்க்க வந்த இரண்டு இளம் இளவரசிகளான எலிசபெத் மற்றும் மார்க்ரெட்டிற்கு பாதுகாப்பு வழங்கும் பொறுப்பு அவருக்கு வழங்கப்பட்டது.

நேரில் பார்த்தவர்களைப் பொறுத்தவரை, மிகச் சிறந்த முறையில் இளவரசர் பிலிப் பணியாற்றினார். ஆனால், அந்த சந்திப்பு, 13 வயது இளவரசி எலிசபெத் மனதில் ஆழமாகப் பரிந்தது.

விரைவாக, தன்னிகரற்று பரிணமித்த அதிகாரியாக தன்னை 1940இல் நிரூபித்த பிலிப், பயிற்சியில் முன்னோடியாளராக விளங்கினார். மேலும், இந்தியப் பெருங்கடலில் முதன் முறையாக நடந்த ராணுவ நடவடிக்கைக்கும் சாட்சியானார்.

மத்திய பெருங்கடலில் நிலைநிறுத்தப்பட்டிருந்த ஹெச்எம்எஸ் வேலியன்ட் போர்க்கப்பலுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட பிலிப், 1941இல் கேப் மட்டாபன் போரில் அவர் ஆற்றிய பங்களிப்புக்காக அவரது பெயர் நினைவுக் குறிப்பில் இடம்பெற்றது.

“நான் மற்றொரு கப்பலை கண்டேன். அது மத்தியப் பாகம் எரிந்து கொண்டிருந்தது. 15 எறிகுண்டுகள் அதன் மீது குறிவைத்து எறியப்பட்டதும் அது இல்லாமலே போனது.”





ஒக்ரோபர் 1942இல், றோயல் கடற்படையில் பணியாற்றும் மிக இளமையான லெப்டினன்ட்களில் ஒருவராக விளங்கி ஹெச்எம்எச் வாலேஸ் போர்க்கப்பலில் சேவையாற்றினார்.

இந்த கால கட்டம் முழுதும் அவரும் இளவரசி எலிசபெத்தும் கடிதங்களை பரிமாறிக் கொண்டிருந்தார்கள். பல்வேறு சந்தர்ப்பங்களில் அரச குடும்பத்துடன் தங்குவதற்காக அவர் அழைக்கப்பட்டார். அத்தகைய சந்திப்புகளில் ஒன்றின்போது 1943இல் கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தின்போது, கடற்படை சீருடையில் இருந்த பிலிப்பின் படத்தை தனது அலங்கார மேஜை மீது எலிசபெத் வைத்தார்.

அவர்களின் உறவு, அரச குடும்பத்தில் உள்ள சில விசுவாசிகள் தரப்பில் எதிர்ப்பு கிளம்பியபோதும், அமைதியாக வளர்ந்தது. அதில் ஒருவர் இளவரசர் பிலிப்பை “முரடான, மரியாதையற்றவர் ” என்று கூறியிருந்தார். ஆனால் இளம் இளவரசி அவரை மிகவும் நேசித்தார். 1946, கோடையில் மன்னரிடம் அவரது மகளை திருமணம் செய்து வைக்குமாறு இளவரசியின் காதலர் கோரினார்.

எனினும், நிச்சயதார்த்தம் அறிவிக்கப்படுவதற்கு முன்பாக, இளவரசருக்கு புதிய தேசிய அடையாளமும் குடும்பப் பெயரும் தேவைப்பட்டது. இதனால் தனது கிரேக்க பெயரை துறந்து, பிரிட்டிஷ் குடிமகனாக மாறினார். மேலும், தனது தாயாரின் குடும்பப் பெயரான மவுன்ட்பேட்டனை தனது பெயருடன் இணைத்துக் கொண்டார்.

திருமண விழாவுக்கு முதல் நாள், மன்னர் ஆறாம் ஜோர்ஜ், அரசு குடும்பத்து “மாட்சிமை பொருந்திய” பட்டத்தை பிலிப்புக்கு சூட்டினார். திருமண நாளன்று காலையில், எடின்பரோ கோமகன், மேரியோனெத் பிரபு, கிரெனிச் பிரபு ஆகியபட்டங்கள் இவருக்கு சூட்டப்பட்டது.

வெஸ்ட்மின்ஸ்டர் மாளிகையில் 20 நவம்பர் 1947இல் திருமணம் நடைபெற்றது. வின்ஸ்டன் சர்ச்சில் இதனை போருக்குப் பிந்தைய பிரிட்டனில் படிந்த சாம்பலில் மின்னிய வண்ணமயமான நிகழ்வு இது என்று வர்ணித்தார்.

கோமகன் மீண்டும் கடற்படை பணிக்கு திரும்பியதும் மால்டாவில் நியமிக்கப்பட்டார். இந்த தம்பதி மற்ற அரச குடும்பம் வாழாத வாழ்வை குறைந்தபட்சம் சிறிது காலத்துக்காவது வாழ்ந்தது.

இவர்களின் மகன் இளவரசர் சார்ல்ஸ் பக்கிங்காம் அரண்மனையில் 1948இல் பிறந்தார். பிறகு மகள் இளவரசி ஏன் 1950இல் பிறந்தார்.

2 செப்ரெம்பர் 1950இல் ஒவ்வொரு கடற்படை அதிகாரியும் கனவு கண்ட லட்சியத்தை அடையும் விதமாக மிகப்பெரிய போர்க்கப்பலான ஹெச்எம்எஸ் மேக்பையின் தளபதியாக அவர் நியமிக்கப்பட்டார்.

ஆனால், அவரது கடற்படை சேவை நிறுத்தப்பட வேண்டியதாயிற்று. ஆறாம் ஜோர்ஜின் உடல்நிலை மோசமாகியது. அவரது மகள் மேலதிக அரச கடமைகளை சுமக்க வேண்டும் என்பதால் அவருக்கு கணவரின் பக்கபலம் தேவைப்பட்டது.

ஜூலை 1951இல் றோயல் கடற்படையில் இருந்து விடுப்பில் சென்றார் பிலிப். மீண்டும் தீவிரமான பணிக்கு அவர் திரும்பவேயில்லை. போர்க் கப்பலில் பணியாற்றுவதற்காக பிறந்தவர் கோமகன் அல்ல என வருத்தங்களுடன் தெரிவித்துக் கொண்டாலும், தமது வாழ்வின் பிந்தைய காலத்தில் கடற்படை சேவையை

(மறு பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருடாந்தம் வீணடிக்கப்படும் பழங்கள், காய்கறிகளின் பெறுமதி எவ்வளவு தெரியுமா?



**சேகு**

இலங்கையில் வருடாந்தம் சுமார் 270,000 மெட்ரிக் டன் காய்கறிகள் மற்றும் பழங்கள் வீணடிக்கப்படுகின்றன. 2015 ஆம் ஆண்டில் தேசிய கணக்காய்வு அலுவலகம் நடத்திய ஆய்வு ஒன்றின் அடிப்படையில் பொருளாதாரத்திற்கு இதனால் சுமார் ரூ 2,000 கோடி நாட்டம் ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் காய்கறிகள் மற்றும் பழங்கள் அறுவடைக்கு பின்னரான நட்டமாக 30-40 சதவிகிதம் வரை இருக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரணவின் தலைமையிலான பொதுக் கணக்காய்வு குழு தெரிவித்துள்ளதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் நாட்டின் 73 வீதமான முதியவர்களுக்கு போதிய அளவு பழங்கள் மற்றும் மரக்கறிகள் உற்கொள்வதற்கு கிடைப்பதில்லை எனவும், 5 வயதிற்கு உட்பட்ட 21 வீதமான சிறுவர்களுக்கு மந்த போசணை ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று நாட்டை முழுமைப்படுத்தும் வகையில் அணைத்தது பகுதிகளில் விவசாயம் இல்லை என்றும் அதற்கான சரியான கொள்கை ஒன்றும் இல்லை என்றும் கோப் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட தேசிய விவசாய கொள்கைத் திட்டம் இன்னும் வரைபு மட்டத்தில் உள்ளது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளை இலக்குவைத்து விவசாயக் கொள்கைத்திட்டம் ஒன்றின் அவசியத்தையும் கோப் குழு குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் காய்கறிகள் மற்றும் பழங்கள் தொடர்பாக அறுவடைக்கு பிந்தைய இழப்புகளைக் குறைப்பதிலும், நியாயமான விலையில் விற்பனை செய்வது தொடர்பிலும் அரசு நிறுவனங்களின் தலையீடு குறித்த செயல்திறன் குழு அறிக்கை தொடர்பிலான கலந்துரையாடலின் போது மேற்குறிப்பிட்ட உண்மைகள் தெரியவந்தன.

இதன் போது மேலும் ஒரு உண்மை தெரியவந்துள் ளது அது யாதெனில் தேசிய விவசாயிகள் மற்றும் நுகர்வோருக்கு இடையில் உள்ள இடைத்தரகர்கள் அதிகமான இலாபங்களை அடைகின்றனர். இதனால் இந்த இரு சாரும் பல சிக்கல்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது. இப்படியான நிலைமையில் இதனைத் தவிர்த்துக்கொள்ளவும் அறுவடையின் பின்னர் ஏற்படும் பாதிப்புக்களை முடிந்தவரை குறைத்துக்கொள்ள நிலையான ஒரு திட்டம் அவசியம் என்ற முடிவிற்கு குறித்த குழு வந்துள்ளது.

அதேபோன்று முழு இலங்கையையும் உள்ளடிக்கியவாறு விவசாய உற்பத்தி பொருட்கள் கிடைக்கும் வகையில் திட்டம் ஒன்று தேவை என்பதுடன் அதன் ஊடக அனைத்து பிரதேசங்களும் அடங்கியவாறு விவசாய கொள்கை திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேலும் விவசாய திணைக்களம் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை என்ன உற்பத்தி பொருட்களை எங்கு எப்போப்பாடி விவசாயம் செய்யலாம் என்று திட்டம் தொடர்பில் விசேட கலந்துரையாடல் முன்னெடுக்கப்படுவதுடன் , அதன ஊடக மக்களுக்கு தேவையானாகி அனைத்து மரக்கறிகளை பழவகைகளும் கிடைக்கும் வண்ணம் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

## இளவரசர்...

தொடர முடியாமல் போனதற்காக அவர் வருந்தியதாகத் தெரிவித்தார்.

சமகாலத்தவர்கள், அவர் தமது சொந்த திறமையுடன் முதலாவது கடல் மன்னராக உயர்ந்திருக்கலாம் என்று கூறுகிறார்கள்.

1952ல் இந்த அரச தம்பதி கொமன்வெத் நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டனர். மன்னர் ஆறாம் ஜோர்ஜும் அரசியும் இந்த பயணத்தை மேற்கொள்ள திட்டமிட்டிருந்தனர்.

கென்யாவின் வேட்டைப் பூங்காவில் பெப்ரவரி மாதம் அவர்கள் தங்கியிருந்த வேளையில், மன்னர் உயிரிழந்து விட்டதாக செய்தி வந்தது. இதயத்தமனி உறைவு எனப்படும் இதயத்துக்கு செல்லும் ரத்த உறைவால் அவர் பாதிக்கப்பட்டிருந்தார்.

தனது மனைவிதான் இப்போது அரசி என அவரிடம் அறிவிக்கும் முடிவு இளவரசிடம் தெரிவிக்கப்பட்டது.

ஒரு நண்பர் பிற்காலத்தில் இளவரசர் பிலிப் பற்றி குறிப்பிடுகையில், பாதி உலகின் சுமையே அவர் மீது வந்தது போல இருந்தது என்றார்.

தனது கடற்படை சேவையால் கவரப்பட்ட அவர், தனக்கான புதிய பொறுப்பை அவரே உருவாக்கிக் கொள்ள வேண்டியதாயிற்று. மணிமுடியை எலிசபெத் ஏற்றுக் கொள்வதால், அந்தப் பொறுப்பு என்னவாக இருக்கும் என்ற கேள்வி எழுந்தது. முடிசூட்டு விழா நெருங்கிய வேளையில் பிறப்பிக்கப்பட்ட அரச கட்டளையில், எல்லா நிகழ்ச்சிகளிலும் அரசிக்கு அடுத்தநிலையில் இளவரசர் பிலிப் இருப்பார் என்று கூறப்பட்டது. இருப்பினும், எவ்வித அரசியலமைப்பு பதவியையும் அவர் வகிக்கவில்லை.

சிறப்பாக நவீனமயமாக்குவது எப்படி, முடியாட்சியை எவ்வாறு சீர்படுத்துவது போன்ற சிந்தனைகள் அடங்கியவராக கோமகன் விளங்கினார். ஆனால், அரண்மனையின் பழமைவாதிகளின் எதிர்ப்பால் அவரது யோசனைகள் ஏற்கப்படாததால் வெறுப்படைந்தார்.

தம்முடைய சில சக்திகளை, தீவிரமான சமூக வாழ்வுக்காக அவர் செலவிட்டார். அவரும் ஒரு சில ஆண் நண்பர்களும் வாரந்தோறும் மத்திய லண்டனில் உள்ள சோஹோ உணவக அறைகளில் சந்திப்பார்கள்.

அவை நீளமான, மகிழ்ச்சியான மதிய உணவாகவும் இரவு கேளிக்கை மன்றங்களுக்கு அவர் செல்லும்போது அடிக்கடி பிரபல நட்சத்திரங்களுடன் புகைப்படம் எடுத்துக் கொள்வதுமாகவும் இருந்தன.

தமது ஆளுகையை செலுத்தக் கூடிய ஓர் இடமாக அவரது குடும்பம் இருந்தது. எனினும், தனது பிள்ளைகளுக்கு பெயர் வைக்கப்பட்டதில் அவரது அதிகாரம் தோல்வியைத் தழுவியது.

-பி.பி.சி.

# அரச குடும்பத்து மரணங்களுக்கு பாலங்களின் குறியீட்டுப் பெயர், முன்னரே திட்டமிட்ட ஏற்பாடுகள்

கோமகன் பிலிப்பின் மறைவுச் செய் தியை நாட்டுக்கு அறிவித்த பிரதமர் பொறிஸ் ஜோன்சன் “Forth Bridge is down” என்று குறிப்பிட்டார்.

“இளவரசரின் மரணம் “Forth Bridge is down” எனக் குறிக்கப்படுவது ஏன்?

பிரிட்டிஷ் அரச குடும்பத்தின் முக்கிய உறுப்பினர்களது மரணங்களை அறிவிப்பதும் மரணச் சடங்குகளை எவ்வாறு நடத்துவது என்பதும் அவர்கள் உயிருடன் இருக்கும் போதே முன்கூட்டியே திட்டமிடப்பட்டு விடுகின்றன.

அவற்றுக்குச் சில முக்கிய பாலங்களின் குறியீட்டுப் பெயர்களும் சூட்டப்படுகின்றன. பிலிப்பின் மரணச்சடங்கு நடைமுறைகள் "Operation Forth Bridge" என்ற குறியீட்டுப்பெயரால் அழைக்கப்படுகின்றன. தேசியதுக்கமும் இறுதி நிகழ்வுகளும் Operation Forth Bridge என்ற தலைப்பின் கீழேயே நடைபெறும்.

மகாராணி எலிஸபெத், இளவரசர் பிலிப் இருவரது சம்மதத்துடன் இந்தக் குறியீட்டுப் பெயர்த் தெரிவும் அதன் கீழான மரணச் சடங்கு ஏற்பாடுகளும் பல வருடங்களுக்கு முன்னரே தீர்மானிக்கப்பட்டு விட்டன.

Forth Bridge என்பது ஸ்கொட்லாந்தில் அமைந்துள்ள உலகப் புகழ் பெற்ற ரயில் பாலத்தின் பெயர். யுனெஸ்கோவினால் அது பாரம்பரிய இடங்களில் ஒன்றாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இளவரசர் பிலிப் Duke of Edinburgh என்ற அரச பட்டப் பெயரால் அழைக்கப்படுகிறார்.அந்தப் பெயர் எடின்பேர்க்கைக் குறிப்பதால் அங்குள்ள Forth Bridge பாலத்தின் பெயரால் அவர் நினைவு கூரப்படுகிறார்.



ஸ்கொட்லாந்தின் Forth Bridge பாலம்

அதனாலேயே பிரதமர் பொறிஸ் ஜோன்சன் பிலிப்பின் மரணச் செய்தி அறிவிப்பில் "Forth Bridge is down" என்று குறிப்பிட்டார். அரண்மனை மரணங்களை இவ்வாறு பாலங்களின் பெயரால் அறிவிக்கும் நடைமுறை, 1990 களின் முற்பகுதியில் தீர்மானிக்கப்பட்டது. அரச குடும்பத்தின் எல்லா உறுப்பினர்களுக்கும் இவ்வாறு மறைவுக்குப் பிந்திய ஏற்பாடுகள் முன் கூட்டியே திட்டமிடப்படுவதில்லை.

மகாராணி எலிஸபெத் மறைந்தால் அது "London Bridge" என்ற குறியீட்டுத் தலைப்பில் அறிவிக்கப்படும். அதுபோன்று முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸ் உயிரிழ ந்தால் அவரது அரச மரியாதைகள் "Menai Bridge" என்னும் பாலத்தின் பெயரில் நடக்கும்.

பிரிட்டிஷ் அரச குடும்ப வரலாற்றில் பெரும் தொற்று நோய்க் காலத்தில் நிகழ்ந்துள்ள மரணம் என்ற ரீதியில் பிலிப்பின் இறுதி மரியாதை ஏற்பாடுகள் முன்னரே திட்டமிட்டதற்கு மாறாகக் கட்டுப்பாடுகளுடன் மிக அடக்கமான முறையிலேயே நடைபெறக்கூடும்.

அஞ்சலி செலுத்துவதற்காகத் திரள வேண்டாம் என்று நாட்டு மக்கள் ஏற்கனவே கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

எட்டு நாள் தேசிய துக்கத்தை தொடர்ந்து பெரும்பாலும் எதிர் வரும் சனிக்கிழமை அவரது உடல் அடக்கம் செய்யப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. அரச மரியாதை அன்றி முன்னாள் படை வீரர் என்ற முறையில் தனியே இராணுவ மரியாதைகளுடன் மட்டுமே அவரது இறுதி நிகழ்வுகள் நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

**குமாரதாஸன்.**
**பாரிஸ்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கிராமத்துடன் கலந்துரையாடல்

# எதிர்பார்ப்புக்களை அடைய புதிய ஜனாதிபதி செயலணி

### அமைச்சர் நாமல் தலைமையில் உருவாக்கம்



கொழும்பு,ஏப்.11

கிராமத்துடன் கலந்துரையாடல் நிகழ்ச்சி மூலம் அரசாங்கம் எதிர்பார்க்கும் நோக்கங்கள், மக்களின் தேவைகளை சிறப்பாகவும் பயனுடையதாகவும் நடைமுறைப் படுத்துவதற்கும் மீள் பரீட்சிப்பதற்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, புதிய ஜனாதிபதி செயலணி ஒன்றை உருவாக்கியுள்ளார்.

கிராமத்துடன் கலந்துரையாடல் கிராமிய அபிவிருத்தி ஜனாதிபதி செயலணி என்று அதற்கு பெயரிடப்பட்டுள்ளது.

அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வின் தலைமையில் நியமிக்கப் பட்டுள்ள இந்த ஜனாதிபதி செயலணிக்கு இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய 15 பேரைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர்களான நிமால் லான்ஸ, திலும் அமுனுகம, காஞ்சன விஜேசேகர, சீத்தா அரம்பேபொல, சன்ன ஜயசுமண, பாராளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், கபில அத்துகோரல, சஞ்சீவ எதிரிமான்ன, நிபுன ரணவக்க, சாமர சம்பத் தஸநாயக்க, டிரான் அலஸ், கெவிந்து குமாரதுங்க, சிவநேசதுரை சந்திரகாந்தன், சிந்தக்க அமல் மாயாதுன்னே மற்றும் ஜயந்த வீரசிங்க ஆகியோர் ஏனைய அங்கத்தவர்களாவர்.

ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் சந்திமா விக்கிரமசிங்க கிராமத்துடன் கலந்துரையாடல் கிராமிய அபிவிருத்தி நடவடிக்கைகள், அதனோடு தொடர்பான அவசியமான அனைத்துத் தகவல்களையும் வழங்கி தொடர்பாடல் நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக இருப்பார்.

கிராமத்துடன் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் மக்கள் முன்வைக்கும் பிரச்னைகள், சிக்கல்கள் தொடர்பில் ஜனாதிபதி வழங்கும் பணிப்புரைகள் மற்றும் உத்தரவுகளை உடனடியாகச் செயல்படுத்துவதற்காக மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் ஏனைய அனைத்து நிறுவனங்களினதும் பிரதானிகள் உட்பட பிரதேச ரீதியாக அனைத்து அதிகாரிகளையும் சேவை முக்கியத்துவத்தின் அடிப்படையில் செயல்பட வைப்பது இந்த ஜனாதிபதி செயலணியின் நோக்கமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு இப்ராஹிமே நிதிப்பங்களிப்பு!

### 50 மில். ரூபா செலவிட்டார் என்று சபையில் கூறினார் சரத் வீரசேகர



கொழும்பு,ஏப்.11

**2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தின (ஈஸ்டர்) தாக்குதல்களுக்கு தற்போது குடும்பத்தினர் உட்பட தடுப்புக் காவலிலுள்ள இப்ராஹிம் என்ற நபரே நிதிப்பங்களிப்பை வழங்கியுள்ளார் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.**

குண்டுத்தாக்குதலை நடத்த முதல் தடவையாக இப்ராஹிம் 50 மில்லியன் ரூபாய் செலவிட்டார் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்றும் இவ்வாறு வழங்கப்பட்ட நிதியில் 30 மில்லியன் ரூபாய் சஹ்ரானிடமும், அவரது நண்பர்களிடம் இருந்ததாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் பாராளுமன்றத்தில் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதேவேளை, சந்தேகநபர்களுக்கு எந்த விதத்திலும் அரசாங்கம் நிதியுதவியை வழங்கவில்லை என்றும் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் இடைநிறுத்தப்படவில்லை. குற்றவாளிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க சட்டமா அதிபரும் விரைவாகச் செயல்பட்டு வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

இதன்படி குறுகிய காலத்துக்குள் வழக்குத்தாக்கல் செய்யப்படும் என்றும் தீவிரவாதிகளின் கொள்கைகளைப் பரப்புபவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்தும் நடைபெற்று வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (எ)

# இன்று முதல் எழுமாறாக பி.சி.ஆர். பரிசோதனைகள்

### இராணுவத் தளபதி தகவல்



கொழும்பு,ஏப்.11

தமிழ் - சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்கும் பொருட்டு பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணத்தின் எல்லைகளில் மட்டுமன்றி நாடு முழுவதும் இவ்வாறு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

எனவே, அனைத்து மக்களும் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு அமுல்படுத்தப்பட்ட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

தற்போது நாளாந்தம் சுமார் 200 தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுவதாக குறிப்பிட்ட அவர் நிலைமை கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, நாளை திங்கள்கிழமை விஷேட விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் ஏராளமான மக்கள் சொந்த ஊருக்குச் செல்வார்கள் என்பதால் எழுமாறாக பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன என அவர் தெரிவித்தார். (எ)

# வரையறையற்ற அதிவேக இணைய சேவை விரைவில்

கொழும்பு,ஏப்.11

வரையறையற்ற இணைய சேவைகளை வழங்குவதற்காக தொடர்புடைய சேவை வழங்குநர்கள் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்துக்கு தங்களது திட்டங்களை சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் வாரம் முதல் இந்தத் திட்டத்தை அறிமுகம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இணையத்தள சேவை வழங்குநர்கள் சமர்ப்பித்த திட்டங்களைப் பரிசீலித்த பிறகு, அவற்றைச் செயல்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்படவுள்ளது.

இதன் மூலம் கையடக்க தொலைபேசி பயன்படுத்துபவர்களுக்கு அதிவேக இணைய வசதிகளை தொடர்ந்து வழங்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

### கொரோனா வைரஸ் தொற்று:

# மூன்றாவது அலை ஏற்படாது தடுக்க மக்கள் ஒத்துழைப்பு மிக முக்கியம்

கொழும்பு,ஏப்.11

சித்திரைப் புத்தாண்டு காலப்பகுதியில் பொதுமக்கள் நடந்துகொள்ளும் விதத்தை பொறுத்தே கொரோனா வைரஸ் தொற்று மூன்றாம் அலை தோன்றுவதற்கான அல்லது அதனைத் தடுப்பதற்கான சாத்தியம் காணப் படுவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

பயணக் கட்டுப்பாடுகளை விதிக்கத் தவறியமை, பண்டிகைக் காலங்களில் கொழும்பிலுள்ள கடைகள் மற்றும் வணிக வளாகங்களில் ஏராளமான மக்கள் கூட்டத்துக்கு வழிவகுத்துள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் கொரோனா தொற்று உறுதியாகும் நோயாளிகள் தொடர்ந்தும் அடையாளம் காணப்படும் இந்த சூழ்நிலையில், சமூகத்திலிருந்து அதிகளவிலான நோயாளிகள் பதிவாகலாம் என்றும் அவர் கூறினார்.

இது சுகாதார அறிவுறுத்தல்கள் மீறப்பட்டுள்ளமையைக் காட்டுவதாக சுட்டிக்காட்டிய அவர், இதுபோன்ற சூழ்நிலையில் பண்டிகை காலத்துக்குப் பின்னர் நாட்டில் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்க முடியுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

# சமுர்த்தி விற்பனை சந்தை வவுனியாவில் திறந்துவைப்பு

வவுனியா,ஏப்.11

புதுவருடத்தை முன்னிட்டு சமுர்த்தி விற்பனைச்சந்தை வவுனியா வேப்பங்குளம் சமுர்த்தி வங்கிக்கு முன்பாக திறந்துவைக்கப்பட்டது.

வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன் தலைமையில் நேற்றுச் சனிக்கிழமை காலை இடம்பெற்ற இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் கலந்து கொண்டார்.



புதுவருடத்தை முன்னிட்டு மக்களுக்குத் தேவையான அனைத்து பாரம்பரிய உள்ளூர் உற்பத்திப் பொருள்களை ஒரே இடத்தில் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளும்படியாக சமுர்த்திப் பயனாளிகளால் இந்த விற்பனைப் பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக வேப்பங்குளம் சமுர்த்தி வங்கியின் முகாமையாளர் துஷ்யந்திமாலா, மற்றும் உத்தியோகத்தர்கள், பொது மக்கள், சமுர்த்திப் பயனாளர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர். (எ)

# சமுர்த்திப் பயனாளிகளுக்கு 5000 ரூபா வழங்க தீர்மானம்

கொழும்பு,ஏப்.11

சமுர்த்திப் பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 5000 ரூபாய் நிவாரணக் கொடுப்பனவை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது என இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu



## சார்ள்ஸ்டன் ஓப்பன் ரென்னிஸ் ஆஷ்லே பார்டி காலிறுதியில்!

நியூயோர்க், ஏப். 11

அமெரிக்காவில் நடைபெறும் சார்ள்ஸ்டன் ஓப்பன் மகளிர் ரென்னிஸ் போட்டியில் அவுஸ்திரேலியாவின் ஆஷ்லே பார்டி காலிறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

முன்னதாக கடந்த வாரத்தில் மியாமி ஓப்பன் சாம்பியனாகிய அவர் அதைத் தொடர்ந்து இந்தப் போட்டியில் பங்கேற்றுள்ளார்.

போட்டித் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் பார்டி காலிறுதிக்கு முந்தைய சுற்றில் 7-6 (7/3), 4-6, 6-4 என்ற செட்களில் அமெரிக்காவின் ஷெல்பி ரோஜர்ஸை வீழ்த்தினார். (ஐ)

## தென்னாரிக்காவுடனான ரி–20: பாகிஸ்தான் இலகு வெற்றி!

ஜொகன்னர்ஸ்பேர்க், ஏப். 11

தென்னாபிரிக்கா அணிக்கு எதிரான முதலாவது இருபது - 20 போட்டியை 4 விக்கெட்களால் வெற்றி கொண்டது பாகிஸ்தான் அணி.

தென்னாபிரிக்கா சென்றுள்ள பாகிஸ்தான் அணி ஒருநாள் தொடரை 2- 1 என்ற ரீதியில் கைப்பற்றியது. இதையடுத்து இரு அணிகளிடையேயான இருபது - 20 தொடர் நேற்று ஆரம்பமானது. ஜொகன்னர்ஸ்பேர்க்கில் நடந்த இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

ஜன்னெமன் மலன், அய்டன் மார்க்ரம் தொடக்கம் கொடுத்தனர். மலன் 16 பந்துகளில் 2 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களை விளாசி 24 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்தார். மார்க்ரம் 32 பந்துகளில் 8 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 51 ஓட்டங்களைப் பெற்று வெளியேறினார். பின்னர் களமிறங்கிய ஹென்றிச் கிளாசென் 50, பைற் வான் பிஜோன் 34 ஓட்டங்களை குவிக்க 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 188 ஓட்டங்களைப் பெற்றது தென்னாபிரிக்கா அணி.

பாகிஸ்தானின் பந்துவீச்சில் நவாஸ், ஹசன் அலி ஆகியோர் தலா 2 விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணிக்கு முஹமட் ரிஸ்வான் அபாரமான தொடக்கத்தைக் கொடுத்தார். 50 பந்துகளில் 9 பெண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காமல் அவர் குவித்த 74 ஓட்டங்கள் அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றது.

பஹார் ஷாமன் 27, பஹீம் அஸ்ரப் 30 ஓட்டங்களை சேர்க்க பாகிஸ்தான் அணி 19.5 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 189 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில் ஹென்றிக்ஸ் 3, சம்சி 2 விக்கெட்களை கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக பாகிஸ்தான் அணியின் முஹமட் ரிஸ்வான் தெரிவானார். (ஐ)





## ஐ.பி.எல். இருபது - 20 போட்டி:

# தவான் - ஷா இணை அதிரடி; டில்லியிடம் வீழ்ந்தது சென்னை

சென்னை, ஏப். 11

சென்னை அணியை 7 விக்கெட்களால் வென்று தனது வெற்றிக் கணக்கை ஆரம்பித்தது டில்லி கப்பிட்டல்ஸ் அணி.

ஐ.பி.எல். இருபது - 20 போட்டியில் நேற்று நடந்த இரண்டாவது போட்டியில் டோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும், ரிஷப் பந்த் தலைமையிலான டில்லி கப்பிட்டல்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற டில்லி கப்பிட்டல்ஸ் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இதனால் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை அணிக்கு கெய்க்வாட், டூ பிளசிஸ் தொடக்கம் கொடுத்தனர். டூ பிளசிஸ் ஓட்டம் எதனையும் பெறாமலே அவேஸ் கானின் பந்தில் எல். பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த மொயின் அலி, நிதானமான ஆட்டத்தை ஆரம்பிக்க, கெய்க் வாட் 5 ஓட்டங்களுடன் பெவிலியன் திரும்பினார்.

அவரைத் தொடர்ந்து அதிரடி ஆட்டக்காரரான சுரேஷ் ரெய்னா களம் புகுந்தார். 4 பௌண்ட்ரிகள் 2 சிக்ஸர்களை விளாசிய மொயின் அலி 36 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது அஸ்வினின் பந்தில் தவானிடம் பிடி கொடுத்து வெளியேறினார்.

அடுத்து வந்தார் அம்பதி ராயுடு அவர் அதிரடியாக ஆட்டத்தை ஆரம்பித்தார். 16 பந்துகளில் ஒரு பௌண்ட்ரி, 2 சிக்ஸர்களை பறக்க விட்ட அவர் 23 ஓட்டங்களுடன் பெவிலியன் திரும்பினார். மறுமுனையில் அதிரடி காட்டிய ரெய்னா அரைச் சதம் கடந்து அசத்தினார். அவர் 3 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்களுடன் 54 ஓட்டங்களை குவித்தார்.

சாம் கரன் 4 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 34 ஓட்டங்களை குவிக்க, ஜடேஜா ஆட்டமிழக்காமல் 3 பௌண்ட்ரிகளுடன் 26 ஓட்டங்களை எடுத்தார். பலத்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் இறங்கிய டோனி ஓட்டம் எதனையும் எடுக்காமலே இரண்டாவது பந்தில் 'போல்ட்' ஆனார்.



இதனால், 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 188 ஓட்டங்களைப் பெற்றார்.

கிறிஸ் வோக்ஸ், அவேஸ் கான் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்களை வீழ்த்தினர்.

சற்றுக் கடினமான இலக்கு நோக்கி துடுப்பெடுத்தாடிய டில்லி அணிக்கு பிரித்வி ஷா, தவான் இணை தொடக்கம் கொடுத்தனர். இருவரும் சிறப்பான அதிரடியை ஆரம்பித்தனர்.

சென்னையின் பந்துகளை இருவரும் எல்லைக்கோடுகளை நோக்கி அனுப்புவதிலேயே குறியாக இருந்தனர். பிரித்வி ஷா 27 பந்துகளில் 7 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களை பறக்கவிட்டு அரைச்சதம் கடந்தார். இதே போன்று தவான் 35 பந்துகளில் 4 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 50 ஓட்டங்களைக் கடந்தார்.

இருவரும் இணைப்பாட்டமாக 138 ஓட்டங்களைப் பெற்ற நிலையில், பிரித்வி ஷாவின் விக்கெட்டை பிராவோ வீழ்த்தினார். அப்போது, ஷா 38 பந்துகளில் 9 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் 72 ஓட்டங்களை குவித்திருந்தார்.

அடுத்துக் களம் புகுந்தார் அணித் தலைவர் ரிஷப் பந்த். அவர் நிதானமான ஆட்டத்தை ஆட, மறுமுனையில் 10 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 54 பந்துகளில் 85 ஓட்டங்களை சேர்த்த தவான் தாகூரின் பந்தில் எல். பி. டபிள்யூ முறையில் வெளியேறினார்.

அடுத்து வந்த ஸ்ரோய்னிஸ் 3 பௌண்ட்ரிகளை விளாசி 14 ஓட்டங்களுடன் தாகூரின் பந்திலேயே வீழ்ந்தார்.

18.4 ஓவர்கள் நிறைவில் டில்லி அணி 3 விக்கெட்கள் இழப்புக்கு 190 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்களால் வெற்றி பெற்றது.

ரிஷப் பந்த் 15, ஹெட்மேயர் ஓட்டம் எதனையும் எடுக்காமலும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

சென்னையின் பந்துவீச்சில் தாகூர் 2 விக்கெட்களையும், பிராவோ ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.04.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் சைவ சித்தாந்த பண்டிதன்
சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் திரு. எப்.எக்ஸ்.அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : நாளும் நல்லவை
வழங்குபவர் திரு. ந. சத்தியபாலன்
எழுத்தாளர், ஓய்வுபெற்ற ஆசிரியர்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை- தற்காப்புக்கலை



12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம் - சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : கலாய்க்கலாம் வாங்க (நேரலை)
6.00 மணி : HELLO கோடம்பாக்கம்
**இரவு**
7.00 மணி : SPOT LIGHT - இராமலிங்கம்
சந்திரசேகரம் - மக்கள் விடுதலை முண்ணனி



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி :செல்லாடுகளம்
10.00 மணி:பதிவு - புத்திக டி சில்வா -
அகில இலங்கை தேங்காய் எண்ணை
உற்பத்தி சங்க ஒருங்கிணைப்பாளர்.




**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : யாழ். காரைநகர் மணற்காடு
கும்பநாயகி முத்துமாரியம்மன்
தேவஸ்தான தேர்த்திருவிழா
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருகோணமலை உவர்தலை துர்க்கை
அம்மன் கோவில் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : யாழ். காரைநகர் மணற்காடு
கும்பநாயகி முத்துமாரியம்மன்
தேவஸ்தான தேர்த்திருவிழா

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடல்கள்
9.00 மணி : ஜெபமாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித சூசையப்பர் மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை
**பகல்**
12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : பாடல்
4.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org